பாரதமணி

சர்வஜித்து ௵ புரட்டாசி ௴

SEPTEMBER 1947

BHARATA MANI

Editor

K. S. VENKATARAMANI

4 அணா

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள். நெம்பர் 80 வரை நூல்கள்

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள், எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

*

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை.

மாத வெளியீடு

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
34, அலமேலுமங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை, 4.

வருட சந்தா ரூபா 3

தனிப் பிரதி அணா 4

மாலை 18 ‖ SEPTEMBER *1947* : சர்வஜித்துளு புரட்டாசிமீ ‖ முத்து 3

பொருளடக்கம்

விஷயம்		பக்கம்
போகிற போக்கில்—கா. சி. வேங்கடரமணி	...	96
பாரதி மணிமொழிகள்	...	99
பாரதியார் பிரார்த்தனை	...	100
நாடும் நீகாழும்—பி. ஸ்ரீ.	...	101
சுவாமி விவேகானந்தரும் வருங்கால இந்திய சமூகமும் —வி. கே. பாலசுப்பிரமணியன்	...	105
திருவள்ளுவரும் பொதுச் சமயமும்—சுவாமி பரமாத்மானந்தர்	...	109
வாலத்தின் வைராக்யம் —எம். எஸ். கமலா	...	115
என்னைத் தள்ளியது யார் ? —பெ. கா. அப்புஸ்வாமி	...	126
இராமாயண அரசியல் —எஸ். அம்புஜம்மாள்	...	129
கிராமத்தில் சுதந்திர தினம் —ரஜனி	...	135
கானம் - பாவம் - காட்சி —த. ரா. ரா.	...	137
கள்ள மார்க்கெட்டும், கழுதையும் —ஜானகி	...	139

"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகளில் வெளிவரும் பெயர்கள் வெறும் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"

1 மண்டலம் (48 நாள்) கிரமப்படி பூஜை செய்யப்பட்டது

ஆயுள் பூராவும் பலன் தரக்கூடிய வெள்ளி ரக்ஷை ரூ. **43-12-0**

தற்போது அனுப்பவேண்டியது ரூ. 3-12-0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் கோரும் கோரிக்கைகளை எழுதி தற்போது ரூ. 3-12-0 மணியார்டர் செய்யவும். கீழே கொடுத்துள்ளபடி நம்மிடம் ரக்ஷை வாங்கிய பிறகு 108 நாளைக்குள் நன்மையான பலன்கள் நடந்தால் பாக்கி ரூ. 40-0-0 அனுப்பவும். தற்போது கேட்கும் ரூ. 3-12-0 ரக்ஷை வெள்ளி கவரிங்குக்கும் தபால் ரிஜிஸ்டர் செலவுக்கும், விளம்பர செலவிற்குமாக மேலே கண்ட தொகை கேட்கப்படுகிறது.

ஸ்ரீ மகாலக்ஷ்மி ரக்ஷை அணிவதால் ஏற்படும் நன்மைகள் :

1 சுக சரீரர்களாயும், எப்போதும் போஜனாதிகளில் குறைவின்றி இருப்பார்கள்.

2 குடும்ப ஒற்றுமை, குடும்ப அபிவிருத்தி தனதான்யாதிகள், வாக்கு பலிதம், குடும்ப நிர்வாக திருப்தி.

3 சகோதிர ஒற்றுமை சகோதிரமில்லாதவர்களுக்கு சகோதரம் ஏற்படும். பிரிந்த சகோதரம் கூடுவர்.

4 மாதர் அபிவிருத்தி, வாகன அபிவிருத்தி, பூமி கட்டட அபிவிருத்தி [ஏற்படும்.

5 புத்திரங்களுக்கு ரோக நிவர்த்தி, மலடு உடையவர்களாயிருந்தாலும் புத்திரம் ஏற்படும்.

6 சத்துருக்கள் பங்கமடைவார்கள், தீராத ரோகமும் தீரும்.

7 வாலிபர்களுக்கு நல்ல குணவதி லபிப்பார்கள். மற்றவர்களுக்கு ஸ்திரீ நேசமும், ஸ்திரீயின் சிசுருஷையும் கிடைக்கும். பால்ய பெண்கள் அணிவதால் சத்புருஷனை அடைவார்கள். மற்றவர் அணிவதால் கணவன் ஒற்றுமை, பிரிந்த கணவனை அடைவார்கள்.

8 ஸ்திரீகள் அணிவதால் மாங்கல்ய தீர்க்கமும், புருஷர் அணிவதால் ஆயுள் தீர்க்கமும்.

9 வாலிபர் அணிந்தால் பிதுருவின் பிரீதியை அடைவார். விசேஷ பாக்யமும், லக்ஷ்மீ கடாக்ஷமும் ஏற்படும்.

10 கல்வி பயிலுபவர்கள் அணிந்தால் கல்வியில் தேர்ச்சியும், படித்தவர்கள் அணிந்தால் உத்தியோகமும் கிடைக்கும். விவசாயிகளுக்கு கிருஷிகம் மேன்மைப்படும். வியாபாரிகளுக்கு வியாபார அபிவிருத்தி ஏற்படும்.

11 அவரவர்கள் செய்யும் தொழிலில் நல்ல ஆதாயம் கிடைக்கும்.

12 நல்ல போகபோக்கியமும் லாபத்தை உத்தேசித்து பணவிரயமும் ஏற்படும்.

N. B: அதர்மர்களும் நாஸ்திகர்களும் விசேஷபலன்களை எதிர்பார்க்க முடியாது. 2. ரக்ஷை ஆர்டர் செய்பவர், ஆர்டர் கிடைத்த 9-ம் நாள்தான் ரக்ஷை பிரசாதத்துடன் அனுப்பப்படும். வி.பி.யில் அனுப்ப சாத்தியப்படாது.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜோதிஷ ஆபீஸ், கோட்டமருதூர்

அரகண்டநல்லூர், P. O. (S. A. Dt.)

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ் : மதுரை

●

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000

●

கிளைகள் : பம்பாய், அகமதாபாத்
கல்கத்தா, ராவல்பிண்டி.

●

பிரதம ஏஜண்டுகள்

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை ETC.

போகிற போக்கில்



“ விளையாட்டிலே நமக்குக் கிடைத்தது பாகிஸ்தான். நாம் கைநீட்டி அடித்துப் பறிக்கப் போகிறது ஹிந்துஸ்தான்” (“ Laughing we got Pakistan. Fighting we will take Hindustan”) “ஹம்ஸ்கர்லியா பாகிஸ்தான்-லடுகர் லேங்கே ஹிந்துஸ்தான் !”

ஹிந்துஸ்தானியில் இது இசையுடன் அமைந்து முகத்தை மலரச் செய்யும் ஒரு வீரப்பாட்டு (Slogan). முஸ்லீம் வாலிபர்களுக்கு மயிர்க்கூச்சிடும் கிளர்ச்சியையும் அன்னியர் நாட்டை ஆண்டு அனுபவிக்கும் பேராசையையும் எளிதில் ஊட்டுகிறது. லாப நஷ்டத்தைக் கணக்கிடாத இது ஒரு வெற்றிக் கூவல். வீண் கூவலாகவே முடியும்.

ஆனால் இது பாகிஸ்தானின் உண்மைக் கருத்தையும், ஜீவ தாதுவையும் வெளிப்படுத்துகிறது. நாடி பிடித்து ஸ்திதியை அறியக்கூடிய அரசியல் வைத்தியனுக்கு இது தான் பாகிஸ்தானின் வாத நாடி. அன்னியரை அரசாளும் அவா இல்லை என்றால் பாகிஸ்தானுக்கு ஆணிவேர் கிடையாது. சட்டியில் வளரும் செடி தான். பூவும், பழமும் கிடையாது. இலைகளின் அழகுதான். இந்த அவா இல்லையென்றால் பாகிஸ்தான் கூச்சலுக்கு வெற்றியும், ஆள் சேர்க்கையும், தியாகமும் கிடையாது. பிரிட்டிஷ் அரசாங்கம் ஒழிந்தது. முஸ்லீம்களுக்குச் சாதகமாகவே ஒழிந்தது. நாம் ஏன் மறுபடியும் பேபர், அக்பர், ஔரங்கசிப் ஆண்டதுபோல் இந்தியா முழுவதையும் மறுபடியும் ஆளக்கூடாது ? இந்த முஸ்லீம் அரசர்கள் நடத்திக் காட்டிய செயலை, நாம் ஏன் இன்று முஸ்லீம் நாடுகளே புத்துயிர் பெற்று வீராவேசம் கூறும் சமயத்தில் செய்து காட்டக் கூடாது ? ஹிந்துக்களிடமும் பலமும் ஒருமையுணர்வும், ஒற்றுமையும் சிதறித்தானே கிடக்கின்றன. பிரிட்டிஷ் அரசியலால் இன்னும் மலிந்துதானே சுயநலத்தைப் பாராட்டி வருகிறார்கள் ? ஹிந்துக்கள் செயலற்ற ஒரு புராதன சமூகம். வேர்க்கரையான் அரித்துப் பட்டதும் படாததுமான ஓர் அரசமரம் போல் அதன் இலைகள் ஆடுகளுக்கு ஏற்றத் தீனியே ஒழிய வேறு பயனில்லை. ஹைதராபாத்தில் 150 வருஷங்களாக வெற்றியுடன் முஸ்லீம் அரசாட்சி நடப்பதை நாம் ஏன் டில்லியிலிருந்து செய்து காட்டக் கூடாது ? யமுனையைக் கைக்கொண்ட அரசனே இந்தியாவுக்கு மன்னன். பாகிஸ்தானின் இந்த உண்மையான நோக்கங்களைப் பல தடவைகளில் நான் எச்சரிக்கை செய்திருக்கிறேன். பிரிட்டிஷ் ராஜதந்திரத்தாலும், காங்கிரஸின் திர்க்கதிருஷ்டியின்மையாலும் பாகிஸ்தான் நமக்கு விதிபோல், இடிபோல் வந்துவிட்டது. இதை நாம் தடுத்திருக்க வேண்டியது. இப்பொழுதாவது இதை நாம் சமரச வழியில், மதியால்தான் வெல்லவேண்டும். இல்லா விட்டால் ஹிந்து நாகரிகமும் பண்பாடும் அடியோடு அழிந்து போய்விடும். அந்த விபத்தைத் தடுப்பதற்கு வேண்டிய முக்கிய வழிகளைக் கவனிப்போம்.

தற்கால அரசியல் - குழப்பத்தைப் பட்சபாதமின்றி தீவிர ஆராய்ச்சி செய்தால் பின்வரும் முடிவுகளை எவரும் ஒப்புக் கொண்டே தான் ஆகவேண்டும்.

1. எல்லையே யில்லாத பாகிஸ்தானுக்கும் ஹிந்துஸ்தானுக்கும் தற்காலம் ஏற்பட்டிருக்கும் எல்லை உண்மையான

எல்லை இல்லை. ஓடும் நதியைக் கோலம் போட்டுப்பிரிப்பதுபோல்ஆகியிருக்கிறது. ரவியோ, சட்லஜ் நதியோ எல்லை நதியாகாது. ஆகையால் இது அழிந்து மறுபடியும் இரண்டும், எவ்விதத்திலோ ஒன்று சேருவதே இயற்கை. ஈசன் செயல் - ஒடிந்த கை மறுபடியும் ஒன்று சேருவது போல், இல்லாவிட்டால் நொண்டிதானே எந்நாளும்!

2. பாகிஸ்தானின் தற்கால அமைப்பு கரை புரளாமல் யுத்தமில்லாமல் ஆக்கிரமிப்பு (aggression) இல்லாமல் நீண்டு வாழ முடியாது.

பாகிஸ்தான் வண்டிக்கு மூக்கணை கராச்சியிலும், அச்சின் மேல்புரம் லாகூரிலும், கீழ்புரம் ஹைதராபாத்திலும் அமைந்திருக்கிறது. கீழ்புரம் அச்சு ஆஸப்ஜா கடையாணி போட்டு ஹிந்துஸ்தானின் ஹிருயத்தில் பதிந்து நிற்கிறது.

3. இஸ்லாமுக்கு நேத்திரங்களான டில்லி, ஆக்ரா இல்லாத பாகிஸ்தானை ஒரு முஸ்லீம்கூட ஒப்பமாட்டான். யமுனை நதியைச்சுற்றியே முஸ்லீம் உள்ளம் சுழலுகிறது. ஆகையால் எவ்வளவு சமாதான முறையில் ஹிந்துஸ்தான் நடந்து கொண்டாலும், முரண்பாடுகளுக்கு அரசியலில் பல இடங்களுண்டு. இப் பிளவின் போக்கே அணுகுண்டு போல், மேலும் பிளவு.

4. அமெரிக்காவும், பிரிட்டனும் முஸ்லீம் சார்பாகவே உண்மையில் பல ஆண்டுகளுக்கு நிற்கும் படியாக மத்திய கிழக்கு (middle east) அரசியல் குழப்பமும், மண்ணெண்ணை (Petrol) வெள்ளத் தேக்கமும் செய்துவரும். இதனுல் பிரிட்டன், அமெரிக்காவுக்குப் பலவித சுயநலன்களும் உண்டு. ஹிந்துஸ்தானுக்கு உண்மையான நண்பர்கள், சைனு, ஒருக்கால் ருஷ்யாவைத் தவிர, வேறு எவர்களும் அரசியல் உலகில் கிடையாது. நமது தீர்க்கதர்சனத்தாலும் உழைப்பாலும், நியாயவழி திட்டத்தாலும் தான் இந்த நண்பர்களைச் சம்பாதிக்க வேண்டும்.

ஆகையால் இந்தியா (ஹிந்துஸ்தான்) முக்கியமாய் இந்த கஷ்டங்களையும் குழப்பத்தையும் தவிர்க்கச் செய்து கொள்ள வேண்டிய முறைகள் என்ன? பாகிஸ்தானையும், ஹிந்துஸ்தானையும் மறுபடியும் ஒரு சமஷ்டியில் எப்படியாவது ஒன்று சேர்ப்பது தான் நம் முக்கிய லட்சியமாய்க் கொள்ள வேண்டும்.

(1) நம்முடைய ஜீவதாதுவை நியாய முறையில் எல்லாத்துறைகளிலும் பலப்படுத்திக் கொள்ள வேண்டியது. அசோகனின் பலத்தை நாம் அடைந்தால் அஹிம்சை தானுகவே வரும். அறிக்கைத் தொட்டிலில் பிறந்த அஹிம்சை அகத்தைத் தான் அழிக்கும்.

(2) பாகிஸ்தானை அடியோடு மறந்துவிட்டு, சமீப நிகழ்ச்சிகளையும் பாராட்டாமல் சமபுத்தியுடன் நியாய முறையில் இந்தியாவில் (ஹிந்துஸ்தானில்) அரசியல் திட்டம் வகுத்து பரிபாலனம் செய்ய வேண்டும். வகுப்பு வாதங்களை அடியோடு தலை கிளம்பாமல் ஒழிக்கும் முறைகளைத் தேட வேண்டியது.

3. பிறர்மேல் படையெடுக்கும் ஆக்கிரமிப்பு (Aggression) நோக்கமன்னியில், நம் சைன்யத்தை நாம் எல்லா அங்கங்களிலும் பலப்படுத்த வேண்டும். யமுனை நதியை நாம் சிறிதுகாலம் காப்பாற்றினுல் பாகிஸ்தானும், ஹிந்துஸ்தானும் மறுபடியும் 10 வருஷத்தில் ஒன்று சேரும். யமுனை நதியின் மேல் எல்லையை நாம் ஒரு கல்கோட்டையாகக் கட்ட வேண்டும்.

4. பாகிஸ்தானையே மறந்து விட வேண்டும். அவ்விடத்தில் நம்முடைய இனத்தாருக்குக் கஷ்டம் ஏற்பட்டு அவர்கள் தானுகவே நம்மிடம் அகதிகளாய் வந்தால், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை நாம் செய்து கொடுக்க வேண்டும்.

5. பாகிஸ்தானிலிருந்து ஹிந்துஸ்தானுக்கு விரோத எண்ணத்துடன் வரும் முஸ்லீம் வரவை (Infiltration) நாம் தயை அன்னியில் தடுக்க வேண்டும்.

6. மதம்விட்டு மதம்மாறும்கருத்தைக் கொண்ட பிரசாரத்தையே தடுத்துவிட வேண்டும். இதற்காக ஏற்பட்டிருக்கும் கூட்டங்களைக் (Societies & Organisations) கலைத்துவிடவேண்டும்.

7. பழிக்குப்பழி வாங்கும் சட்டங்களையோ, மனோபாவத்தையோ அடியோடு ஒழிக்க வேண்டும். நியாயத்தையே அடிப்படையாகக்கொண்டு நமது நாட்டில் உள்ள முஸ்லிம்களை நாம் சரிவர அன்புடன், மரியாதையுடன் நடத்த வேண்டும். செயலால்வரும் காருண்யமே காருண்யம். விஷமம், ராஜத்ரோகம் செய்யும் முஸ்லீம்களையோ, நம்மவர்களையோ, பயமின்னியில் அடக்க வேண்டும்.

8. பாஷைப் பிரகாரம் மாகாணங்களை உடனே பிரித்து (Linguistic Provinces) கிராமங்களையே அடிப்படையாகக்கொண்டுப் பாடுபடுபவனைஉற்சாகப்படுத்திப் பல திட்டங்கள் போட்டு, உணவுப் பஞ்சம், துணிப்பஞ்சம், இதரப் பேய்ப் பஞ்சங்களை உடனே விலக்க வேணும். இதற்கு :—

a. இந்திய மாகாண மத்திய சர்க்கார் அரசியல் திட்டம் ஸோஷலிஸத்தை (Socialism) நிறுவ வேண்டும். நமது மனப்பான்மைக்கும் அது மிக ஒத்தது.

b. பத்து கிராமங்களை ஒன்று சேர்த்து அதை ஓர் பஞ்சாயத்து ராம ராஜ்யமாகச் செய்து எல்லா ஜனங்களுக்கும் சுகத்தையும் க்ஷேமத்தையும் அளிக்கவேண்டும். பிறரைச் சுரண்டும், சூறையாடும் முறைகளை அடியோடு ஒழிக்க வேண்டும்.

c. பண்டம் பாடிகள் அபிவிருத்தியே அரசியலின் கண்ணாக ஆக வேண்டும். பதவி மோகத்தையும், செருக்கையும், வானத்தையளாவும், சம்பளத்தையும் ஒழிக்க வேண்டும்.

பிளவுக்கு மாத்து ஹிந்துஸ்தானையே ராம ராஜ்யமாகச் செய்வது தான். ஒடிந்த கை தானாகவே ஒன்று சேரும். அசோகன், அக்பர் அவாக் கொண்ட இந்தியா உண்மையில் திரும்பவரும்.

இப்பெருங்காரியங்களை நிறைவேற்றப் பண்டித நேரு மந்திரிசபையால் முடியுமாஎன்று பின் கவனிப்போம். இந்தியாவுக்கு அரசியலில் தற்காலம் முக்கிய லட்சியம் இதுதான். ஹிந்துஸ்தானையும், பாகிஸ்தானையும் எப்படி மறுபடியும் ஒன்று சேர்த்து ஈசன் அருள் பெற்று 'ஸர்வேஜனா சுகினோ பவந்து' என்ற ஹிந்துக்களின் முக்கிய தினசரிக் கொள்கையானப் பிரார்த்தனையை செயல் ரூபமாகச் சித்திக்கச்செய்வது என்பதுதான்.

இந்த ஐக்கியத்தைப் பெற்று உலக அரசியலில் சாமாதானமே நீடூழி வாழச் செய்ய ராஜ்ய பரிபாலனத்தில் அத்வைத மனோபாவமே முக்கிய தர்மமாகக் கையாள வேண்டும். இந்த நெருக்கடியில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குருஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் சுதந்திர தினத்தன்று அருளிய சுபோபதேசம் உண்மையான உயர்தர பிரஜைத்துவம்(citizenship) தேடும் எவரும்,பாராயணம் செய்யத்தக்கது. இதை செயலில் நாம் பாராட்டினால், புத்துயிர் பிறக்குமென்பதில் ஐயமில்லை. விஷ்ணு சக்கரத்தையே இப்பொழுதுகொடியாகக் கொண்ட ஹிந்துஸ்தான் இந்தியாவாகவே ஐக்கியத்தில் மாறி உலகத்திற்கே மறுபடியும் ராம ராஜ்யமென்றால் என்னவென்று காட்டி நாம் இழந்த சாந்தத்தை நிலை நாட்டும்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அருளிய வாக்குப்படி.

“அத்வைத சித்தாந்தத்திலே பழகியவர்களுக்கு வேறு சித்தாந்தங்களிலே வெறுப்பு இருப்பதற்கு இல்லை. எந்த மதத்தினிடமும் மத்யஸ்தனிடமும் அவனுக்குச் சமரசமே ஏற்படும். சமரஸவுணர்ச்சியோடு செய்யப்படுகின்ற ராஜ்ய பரிபாலனமே சிறந்தது என்று சொல்லவும் வேண்டுமா? மீண்டும் உலகெங்கும் ஜனக ராஜ்யமும், ராம ராஜ்யமும் நிலவ வேண்டுமானால், இராகமும் த்வேஷமுமின்றி அன்பும், அருளுமே உலகத்தைச் செழிப்புறச் செய்ய வேண்டுமானால் உலகெங்கும் அத்வைத சாஸ்திரம் பரவியும் ராஜ்யத்திற்கு மூலஸ்தானங்களிலே அனுபவிகள் நிலைபெற்றும் இருக்க வேண்டும். இவ்வாறிருப்பதற்கு எல்லாம்வல்ல ஈசன் அருள் புரிவாராக. சிவம்.”

காவிரிப்பூம்பட்டினம்
17-9-47

மணி.

பாரதி மணிமொழிகள்

1. பள்ளித்தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்
2. ஓயுதல் செய்யோம், தலைசாயுதல் செய்யோம்
3. சந்தித் தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்
4. நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்
5. ஏழையராகி இனி மண்ணில் துஞ்சோம்
6. தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
7. பேரன்பு செய்தாரில் யாவரே
   பெருந்துன்பம் பிழைத்து நின்றார்?
8. வீரசுதந்திரம் வேண்டிநின்றார், பின்னர்
   வேறொன்று கொள்வாரோ?
9. விண்ணில் இரவிதனை விற்றுவிட்டு, எவரும்போய்
   மின்மினி கொள்வாரோ?
10. கண் இரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
    கைகொட்டிச் சிரியாரோ?
11. உழவுக்கும் தொழிலுக்கும்
    வந்தனை செய்வோம் - வீணில் -
    உண்டுகளித் திருப்போரை
    நிந்தனை செய்வோம்!
12. தனிஒருவனுக்கு உணவிலையெனில்,
    ஜகத்தினை அழித்திடுவோம்!
13. நாம்—எல்லாரும் இந்நாட்டுமன்னர்
14. வேறுவேறு பாஷைகள்—கற்பாய், நீ
    வீட்டுவார்த்தை கற்கிலாய்! போபோபோ
15. உறுதிகொண்ட நெஞ்சினாய்! வாவாவா
16. சாதம் படைக்கவும் செய்திடுவோம்,—தெய்வச்
    சாதி படைக்கவும் செய்திடுவோம்!
17. பெண் - அறத்தினை ஆண்மக்கள் வீரந்தான்
    பேணுமாயின், பிறகொரு தாழ்வில்லை
18. அன்னம் ஊட்டிய தெய்வ மணிக்கையின்
    ஆணை காட்டில், அனலை விழுங்குவோம்!
19. திறமான புலமையெனில், வெளிநாட்டோர்
    அதை வணக்கம் செய்தல்வேண்டும்
20. உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
    வாக்கினிலே ஒளி உண்டாகும்
21. நம்பினார் கெடுவதில்லை -
    நான்குமறைத் தீர்ப்பு

பாரதியார் பிரார்த்தனை

1. பக்தியினால் பெருமையெல்லாம் கொடுக்கச் சொல்லி,
பசிப்பிணிகள் இல்லாமல் காக்கச் சொல்லி,
உத்தம நன்னெறிகளிலே சேர்க்கச்சொல்லி
உலகளந்த நாயகிதாள் உரைப்பாய், நெஞ்சே

2. அறிவாகிய கோயிலிலே,
அருளாகிய தாய்மடிமேல்,
பொறி வேலுடனே வளர்வாய்! அடியார்
புதுவாழ்வுறவே புவிமீது அருள்வாய்.

3. 'வலிமை, வலிமை' என்று பாடுவோம்;—என்றும்
வாழும் சுடர்க் குலத்தை நாடுவோம்;
கலியைப் பிளந் திடக்கை ஓங்கினோம்-நெஞ்சில்
கவலை யிருள் அனைத்தும் நீங்கினோம்!

4. மண் பயனுறவேண்டும்
வானகம் இங்கு தென்படவேண்டும்!

5. கண்ணன் எம்பெரு மான் அருள் வாழ்கவே!
கலி யழிந்து புவித்தலம் வாழ்கவே!
அண்ணல் இன்னருள் நாடிய நாடுதான்
அவம் நீங்கிப் புகழில் உயர்கவே!

நாடும் நகரமும்

பி. ஸ்ரீ.

பாரதி மண்டபம்

பாரதியார் பிறந்த எட்டையபுரத்தில் பாரதி மண்டபம் ஒன்று கட்டிக் கவிஞரின் நினைவுக்குறியாக நிறுத்துவதை ஒரு விசேஷ நன்முயற்சி என்றே சொல்ல வேண்டும். இது ஒரு சிறந்த தமிழ்ப்பணி—தமிழ் நாட்டில் ஒரு பெருஞ் செயல், — இனி நாம் கட்டி நிறுத்த வேண்டிய சுதந்திரத் தமிழகத்தின் ஓர் அறிகுறி. நாளது அக்டோபர் மாதம் 13-ம் தேதி ராஜாஜி தலைமை வகிக்க, கவியரசி சரோஜினி தேவி மண்டபத்தைத் திறந்து வைப்பார். அந்நாள் தமிழ்நாட்டுக்கே பொதுவான ஒரு திருநாள்.

கவியரசர் பாரதியாரின் நினைவுக்குறியாகிய மண்டபத்தைக் கவியரசி சரோஜினி தேவியார் திறந்துவைப்பது பெரிதும் பொருத்தமுடையதே. புதுமைத் தமிழ் எழுத்தாளர் - கூட்டத்திலும் ஒரு பொறுப்பான ஸ்தானம் வகிக்கிற ராஜாஜி தலைமை தாங்குவதும் பொருத்தமானதே. இரண்டு கவர்னர்கள் அவ்விழாவில் பங்கெடுத்துக் கொள்வர் என்று பெருமைப்பட வேண்டாம்—தற்கால வங்காளக் கவர்னருக்கும், தாற்காலிக ஐக்கிய மாகாணக் கவர்னருக்கும் அந்தக் கவர்னர்-ஸ்தானங்கள் அவ்வளவு முக்கியமானவையா ? தலைவர்களுக்கு நிச்சயமான, மேன்மைதங்கிய, ஸ்தானம் எழுத்தாளர்-உலகில்தான் இருக்கிறதே! பாரதியார் கவர்னர்களைக் காட்டிலும் பேனுவீரர்களைத் தானே மதிப்பார் ?

வேறொரு மண்டபம் வேண்டும்

'பாஞ்சாலி சபத'த்தில் பாரதியார் ஒரு மண்டபத்தை வருணிக்கிறார். நிபுணன் வரைந்த சித்திரம் போலவும், கவிஞன் கண்ட கனவு போலவும் அமைந்துவிட்டதாம் அந்த மண்டபம். கல்லையும் மண்ணையுங்கொண்டு, பொன்னையும் மணியையும் இடையிடையே இசைத்து இயற்றிய ஒரு சுந்தரமான காவியம் அது!— என்று வருணிக்கிறார். இப்படிக் கனவு காணும் கவிஞருக்கு, எட்டையபுரத்து மண்டபம் எவ்வளவு அழகான நினைவுக்குறியாக அமைந்தபோதிலும், வேறு நினைவுக் குறிகளும் வேண்டும். பாரதி பாடல்களுக்கும் வசன நூல்களுக்கும் பிழையில்லாத, அழகான, பதிப்பு ஒன்று விரைவில் வெளிவர வேண்டும். இதுவரை வெளிவந்த புதிய பதிப்புக்களில், புதிய புதிய பிழைகளையும் குறைகளையும் கண்டு பாரதி-ரசிகர்களின் உள்ளம் புண்பட்டது. "வெண்கல மணி முழங்குகிறதோ ? முரசு முழங்குகிறதோ ?" என்றும், சிற்சில சமயங்களில் "இடிதான் முழங்குகிறதோ ?" என்றும் வியக்கும்படியாகப் புதிய மின்னற் பாடல்கள் பாடிய கவிஞரை நேரில் அறிந்தவர்களிலும், அப்பாடல்களை அப்படிக் கேட்டு மெய்ம்மறந்து அனுபவித்தவர்களிலும், சிலராவது இன்றும் இருக்கிறார்கள். அவர்கள், கண்விருந்தாகிய அழகான பதிப்பிலாவது அந்தச் செவிவிருந்தான பாடல்களைக் கண்டு களிப்பது என்நாளோ ?— என்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய இதய தாபமும், தமிழர்களின் கவிதாதாகமும் தீரும்படி விரைவில் நல்ல பதிப்பு வெளிவரும் என்று எதிர்பார்க்கிறோம். அத்தகைய பதிப்பு, பாரதிக்கு ஒரு ஞான மண்டபம்—நாடெங்கும் உலாவித்திரியும் மண்டபம்.

வங்கம் ஏறிய தமிழ்

சங்கம் ஏறிய தமிழ் வங்கம் ஏறுகிறது. 'கப்பல் ஏறுகிறது' என்ற பொருளில் அல்ல, அந்தப் பெருமையும் கிடைக்கத்

தான் போகிறது. வங்கநாட்டுக் கவியும், 'ஆசியாவின் ஆஸ்தான மகாகவி' என்ற புகழுக்கு உண்மையாகவே உரிய வருமாகிய ரவீந்திரநாத தாகுரின் சாந்தி நிகேதன ஆசிரமத்திற்கு ராஜா அண்ணாமலைச் செட்டியார் சுமார் இரண்டாயிரம் ரூபா மதிப்புள்ள தமிழ் நூல்களை அளித்திருப்பது ஒரு நல்ல செய்தி. தமிழ்நாடும் வங்கநாடும் ஒருங்கே பெருமைகொள்ளத் தக்க நற்செய்தி. தமிழ் நூல்களை அப்படி ரூ. 2,000 என்று மதித்தால் போதுமா? விலையிலாப் பொக்கிஷமல்லவா?—இப்படி நான் எழுதிக்கொண் டிருக்கும்போதே ஓர் இளைஞர், "அவ்வளவு நல்ல செய்தியா? அந்தப் பாக்கிஸ்தான்-துயரமும், இந்தத் திராவிடஸ்தான் - கிளர்ச்சியும் இனி மேல் தீர்ந்துபோகுமா?" என்று கேட்கிறார். 'கேள்வி பொருத்தமில்லாதது' என்று தள்ளிவிட முடியாது. தமிழிலக்கியத்தின் ஜீவநாதம்,

> யாதும் ஊரே !
> யாவரும் கேளிர் (உறவினர்)

என்ற மொள்கைதானே? வீட்டுக்குள்ளே வெட்டுங்குத்துமாய் இருக்கும் 'சுதந்திர சொர்க்க'த்தைத் தாகுரும் விரும்பவில்லையே! தாகுரின் லட்சியமும், தமிழிலக்கியத்தின் லட்சியமும் ஸாராம்சத்தில் ஒன்று தான். தமிழ்நாட்டுக்கும் வங்கநாட்டுக்கும் இடையே இலக்கிய உறவு வளர்ந்து, உடைந்த உள்ளங்களை ஒன்றுபடச் செய்யும் என்று கலைமகளைப் பிரார்த்திப்போம்.

கல்விக் கடல்

கவிக்கடலான பாரதியாருக்கு ஒரு நல்ல பதிப்பும் இல்லையே, அவர் செய்தி உள்ளபடி நாடெங்கும் எட்டி, நாட்டு மக்களின் இதயங்களைத் தொட்டு இன்னும் வழிப்படுத்த வில்லையே!—என்று நாம் வருந்திக்கொண்டிருக்கும் போதே, கல்விக்கடலான விபுலானந்தரின் பிரிவுச் செய்தியும் தமிழ் மக்களின் துயரத்தை அதிகப்படுத்திவிட்டது. விபுலானந்தர் இலங்கைப் புலவர்; தமிழ்த் தாயின் தவப்புதல்வர்களில் ஒருவர். இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ்ப் பயனும் துய்த்த பேராசிரியர். "தமிழ்க் காதல் என்றால் வடமொழித் துவேஷம் தான்!" என்ற விஷமப் பிரசாரம், விஷப்பிரசாரமுமாகிச் சில இடங்களில் நடைபெற்றபோது, தமிழ்ப் பயிற்சியோடும் ஆங்கிலப் பயிற்சியோடும் வடமொழிப் பயிற்சியும் விபுலானந்தர் பெற்றிருந்தார். இலக்கியப் பயிற்சி பெற்றவர்; பக்தியுள்ளம் வாய்ந்தவர். இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்து பொது நலத்தொண்டு ஆற்றியவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து இளைஞருள்ளங்களை நல்வழிப்படுத்த முயன்ற கலைஞர். பழைய தமிழ் நூல்களை நுட்பமாக ஆராய்ந்து தமிழ்ப் பண்பு நன்கு பெற்றுத் தமிழ்ப் பணி ஆற்றியவர். 'தமிழ் கூறும் நல்லுலக'த்தையே குடும்பமாகக் கொண்டு இல்லறம் துறந்து தம்மைத் தமிழ்த் தொண்டுக்கும் சமயத் தொண்டுக்கும் உரிமையாக்கியவர். இவரது வாழ்வு, ஒரு முகமாக, உயர்ந்த லட்சியத்திற்கே அர்ப்பணமாகிவிட்ட முனிவர் - வாழ்வு. இத்தகைய விபுலானந்தர் உலக வாழ்வை நீத்தார் என்ற செய்தி, "புலமையுலகில் பெருநஷ்டம் அல்லவா?" என்ற கவலைக்குள் பல தமிழறிஞர்களையும் ஆழ்த்திவிட்டது. இவரது கட்டுரைகள், செய்யுள்கள் முதலியன தொகுக்கப் பெற்று ஓர் அழகிய பதிப்பாக வெளிவரும் என அறிந்து மகிழ்கின்றோம். இம் முத்தமிழ்ப் பேராசிரியரின் நினைவுக் குறியாக நினைவு மலரொன்றை யாழ்ப்பாணத்து "ஈழகேசரி" வெளியிடப்போகிறது என்றும் கேள்விப் படுகிறோம். நல்ல ஆலோசனை: சுவாமிகளின் 'நினைவுமலர்' சிறந்த ஆராய்ச்சியறிஞர்களான தமிழர்களின் கட்டுரைகளால் நிறைந்து மலர்ச்சிபெற வேண்டும், ஞானமணம் கமழ வேண்டும். தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் சிறந்து விளங்கும் புலவர்களும் ரசிகர்களும், ஆராய்ச்சியாளர்களும், பொது நலம் பேணும் பக்தர்களான அறிஞர்களும்

ஒரு விஷயம்!

நாம் எவ்வளவோ விதங்களில் பணத்தைச் செலவு செய்கிறோம். ஆனால், மிகவும் உபயோகமுள்ள வழியில் செலவிடுவது அவசியம் அல்லவா ?

ஆம்—'பாரத மணி'க்கு ஒரு வருஷ சந்தாவைக் கட்டிவிடுங்கள். அதிகமில்லை, மூன்றே ரூபாய்தான்.

உங்கள் { அறிவு விருந்து / பொழுது போக்குச் } சாதனம்

பிரபல எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள்
பல ரக விஷயங்கள் வாசக நேயர்களுக்கு வழங்கப்படுகின்றன
விளம்பரங்களுக்கு அரிய சாதனம்

சந்தா விவரம்:—

ஒரு வருஷத்துக்கு	3	0	0
ஆறு மாதத்துக்கு	1	8	0
தனிப் பிரதி விலை	0	4	0

பாரத மணி காரியாலயம்,
34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை.

பிணியாளர்களுக்கோர் தேறுதல்

மேல் நாட்டு மருந்துகளாலும் ஏனைய நம் நாட்டு மருந்துகளாலும் குணமடையாதிருக்கும் "குஷ்டம்" "படை" "மேகப்பற்று" முதலான சரும வியாதிகளுக்கு எமது

கந்தகராஜ ரஸாயனம்

உறுதியான பலனைக் கொடுக்கிறது

பவுண்டு விலை ரூ. 60—0—0

வாத வியாதி, மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் முதலான எவ்வித நோய்களையும் எமது மூலிகைகளால் செய்யப்பட்ட ஔடதங்கள் கண்டிக்கின்றன.

முழு விபரங்களுக்கு:

அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள் :

மானேஜர்,
ஆர்ய வைத்தியசாலை,
கோட்டைக்கல், தென் மலையாளம்

இந்நினைவு மலரைச் சிறப்பித்து அழகு செய்வர் என்று எதிர் பார்க்கிறோம்.

தமிழில் ஒரு பகீரத முயற்சி

கல்வி மந்திரி ஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியார் தமிழில் 'கலைக்களஞ்சியம்' ஒன்று தயாரித்து வெளியிட முயன்று வருகிறார் என்பதைப் பலரும் அறிவர். வரவேற்கத் தக்க ஆலோசனை தான். அமைச்சர் வேண்டுகோளுக்கு இணங்கிச் செல்வர்கள் நன்கொடை அளிக்க முன் வந்திருக்கிறார்கள். லட்ச ரூபாயாவது சேர்ந்த பிறகுதான் இவ்வேலை ஆரம்பமாகும் என்று பொறுப்பாளர்கள் அறிவிக்கின்றனர். "கலைக் களஞ்சியம்" என்றால் லேசான காரியமல்ல; "என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா" என்ற ஆங்கிலக் கலைக் களஞ்சியம் போன்ற ஓர் அரும்பெரும்பணி. உலகத்திலுள்ள பலவேறு விஷயங்களும் கலைக் களஞ்சியத்திலே விளக்கம்பெற வேண்டும். "பகீரதன் ஆகாச கங்கையைப் பூலோகத்திற்குக் கொண்டு வந்தான்" என்று சொல்லுகிறார்கள் அல்லவா? அப்படியே கல்வி மந்திரியார் ஞான கங்கையைத் தமிழிலே கொண்டுவரப் பார்க்கிறார். இந்தச் செயற்கருஞ் செயலைச் செய்வதற்குப் பொருள் வசதி தேடுவது கூடப் பெரிய காரிய மன்று. நாடு இன்று இருக்கும் நிலையில், தக்க அறிவுவசதி இருக்கிறதா?—என்பது ஒரு பெருங் கேள்வி. மொழித் துவேஷமும் மதத் துவேஷமும், பெரிய புராணம் கம்பராமாயணம் போன்ற பெருநூல்களை எரித்துத்தான் ரசிக்கமுடியும் என்ற 'ரசிகத்தன்மை'யும் நடையாடும் நிலையில், தக்க புலவர்களையும் நல்லறிஞர்களையும் கொண்டு இத்தனிப் பெரும் பணி நடைபெற வேண்டுமே!

திறமான புலமை வேண்டும்

கல்வி மந்திரி கேட்ட லட்சத்தில் பெரும்பகுதிக்கு மேலே கிடைத்துவிட்டது. சாந்தி நிகேதன ஆசிரமத்திற்குப் பரிசாகத் தமிழ் நூல்கள் அளித்த ராஜா அண்ணாமலைச் செட்டியாரும், வேறு செல்வர்களும் பொருளுதவி செய்திருக்கிறார்கள். ஆனால் இப் பெருநூலை இனிது முடிப்பதற்குக் காலஞ்சென்ற விபுலானந்தரைப் போன்ற பெரும் புலவர்கள் வேண்டுமே. 'புலமை வாழ்வே வாழ்வு' என உழைத்துவரும் தமிழ்ப்பேரறிஞர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். தங்களைத் தமுக்கடித்து விளம்பரப்படுத்திக் கொள்வதில்லை. அத்தகைய புலவர்களும் ஆராய்ச்சிக்காரர்களுமே கலைக் களஞ்சியத்தில் சரியான தானியங்களைக் கொண்டு சேர்க்கத் தக்கவர்கள். நுனிப் புல் மேய்ச்சலாக ஆராய்ச்சி செய்து உள்ளத்தை விருப்பு வெறுப்புக்களால் நிறைத்துக் கொண்டு மனம் போனபடியெல்லாம் பேசிச் சரியான கொள்கைகளையும் கருத்துக்களையும் மறைக்கப் பார்க்கிறவர்கள், அறிவுலகில் உணவுத் தானியங்களைப் பதுக்கி வைப்பவர்களே யாவர்.

வங்காளக் கவர்னராக இருக்கும் ராஜாஜி "ஹிஸ் எக்ஸெலென்ஸி" ஆகிவிட்டோம் என்று இறுமாந்திருக்கவில்லை. "கவலையும் அபாயமும் அகர்த்தமும் பொருந்திய ஒரு வேலையை நான் வகிக்க நேரிட்டிருக்கிறது!" என்று சொல்லுகிறார். அதுபோன்ற ஒரு பெரும் பொறுப்பான காரியம்தான், கலைக்களஞ்சிய வேலையை இன்றைய தமிழ்ப் புலவர்களும் அறிஞர்களும் வகிக்க நேர்ந்திருப்பதும் - என்று தோன்றுகிறது. கலையுலகில் அபிமான நாபிமானங்களுக்கும், கள்ளக்கடை வியாபாரத்திற்கும் இடம் கிடையாது. நம் கல்வி மந்திரியார், 'காய்தல் உவத்தல்' இன்றி, பக்தியுணர்ச்சியுடன் பெருங்காரியங்களைச்செய்யக்கூடியவரே. அவர் கலைக்களஞ்சியங் குறித்து முயற்சி செய்யத் தொடங்கியதும், அவரது தமிழ்ச் சகோதரர்களெல்லாம் குதூகலத்தில் மூழ்கியிருக்கிறார்கள், நன்றி தெரிவிக்கிறார்கள். இந்நிலையில் நமது மந்திரியார், கவலையும் அபாயமும் பொருந்திய இப்பெரும் பணியைச் செம்மையாகச் செய்து முடிக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

சுவாமி விவேகானந்தரும் வருங்கால இந்திய சமூகமும்

வி. கே. பாலசுப்பிரமணியன், கல்கத்தா

இந்திய நாடு அடிமைத் தளையிலிருந்து தன் கதியைத் தானே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையை அடைந்து விட்டது. நமது முன்னேற்றம் இனி எவ்வாறு நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பது குறித்துப் பலவித அபிப்பிராயங்கள் வெளியிடப் பெறுகின்றன. இக்கட்டுரையில் சுவாமி விவேகானந்தரின் சில சிறந்த கருத்துக்களை எடுத்துக்கூற முயல்கிறேன்.

வேறு சமய அறிஞர்களைப்போல் அன்றி, விவேகானந்தர் தமது உபதேசங்களிலே மனித வாழ்க்கையின் பல துறைகளில் மனிதனுக்கு ஏற்படும் கஷ்டங்கள், அவைகளைச் சமாளிக்கும் முறைகள் முதலியன பற்றி மிகவும் விவரமாகவும் தெளிவாகவும் எடுத்துக்கூறியிருக்கிறார். நமது கல்விமுறையில் தேவையான மாறுதல்கள், சமூகச் சீர்திருத்தங்கள், பெண்கள் - முன்னேற்றம், சாதிப் பிரசினை முதலிய விஷயங்களைப் பற்றியெல்லாம் சிறிதும் ஐயத்திற்கிடமின்றி நம் சுவாமிகளின் உபதேசங்களில் அறிந்துகொள்ளலாம். இவற்றைக் குறித்து அவர் பல ஆண்டுகளுக்கு முன்பே பேசியிருப்பினும், அக்கருத்துக்கள் காலவரையின்றி கட்டுப்படாமல் இன்றும் பயன் அளிக்கும் தன்மை வாய்ந்தன என்று அவைகளைப் படிக்கும் போது நாம் உணர்வோம்.

கல்வி முறை

முதலில் நமது கல்வி முறையைத் தகுந்தபடி மாற்ற வேண்டுமென்பது பற்றி ஒருவித அபிப்பிராய பேதமும் கிடையாது. தற்காலக் கல்வியின் மூலம் ஒரு சிறுவன் கற்றுக்கொள்வது, " தன் தந்தை ஒரு மூடன்; தன் பாட்டன் ஒரு பைத்தியக்காரன்; தன் உபாத்தியாயர்கள் ஆஷாட பூதிகள்; வேத சாஸ்திரங்கள் எல்லாம் வெறும் பொய்க்களஞ்சியங்கள் " என்பது. இக்கல்வியினால், பதினாறு வயதாகும்போது உயிரற்ற, எலும்பற்ற, எதிர்மறைப் பிண்டமாயிருக்கிறான். இந்தக் கல்வி அவனுக்குப் பசிப்பிணியையாவது, மானிடவாழ்விற்கு அத்தியாவசியமான தேவைகளையாவது பூர்த்தி செய்துகொள்வதற்கு உபயோகமாயிருக்கிறதா ?

இப்பேர்ப்பட்ட கல்வி முறையை— உயர்தரக்கல்வியும் சரி, அடிப்படைக் கல்வியும் சரி—நாம் கட்டாயம், கூடிய சீக்கிரம், ஒழித்துக் கட்டவேண்டும். இதற்குப் பதிலாக நமது சிறுவர்கள் தொழிற்கல்வி பெறவேண்டும். தம்மால் கூடிய தொண்டினைச் சமூகத்திற்குச் செய்துவிட்டு, பிரதியாகத் தமது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வது சாத்தியமாகவேண்டும். இது நமது முதல் வேலை.

சமய அடிப்படை

நமது தேசத்தில் கலாசாரம், பண்பாடு ஆகியவற்றின் அடிப்படை - ஆதாரம் சமயமே. இந்த அஸ்திவாரத்தின்மேல் கட்டிய கட்டடங்களே பின்னால் காலப் போக்கில் எதிர்ப்படும் அதிர்ச்சிகளை ஒருவாறு சமாளிக்க முடியும். ஆகவே, நாம் கல்வித் திட்டத்தைத் தயாரிக்கும்போது பாரமார்த்திக மூலத்திலிருந்துதான் (Spiritual Basis) ஆரம்பிக்கவேண்டும். இல்லையேல் நமது திட்டங்கள் 'பொல பொல' வென்று உதிர்ந்துவிடும்.

தேகப் பயிற்சி

புதிய கல்வித்திட்டத்தில் தேகப்பயிற்சிக்கு ஒரு தகுதியான ஸ்தானம் அளிக்க வேண்டும். இதை ரொம்ப முக்கியமாகக் கவனிக்கவேண்டும். சுவாமிஜிக்கு நமது எல்லாக் குற்றங் குறைகளையும் விட, நமது தேக திடமின்மையே மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. வாலிபர்களுக்கு அவர் புத்திமதி இது தான் : " நீங்கள் பலசாலி ஆகுங்கள். உங்களுக்குப் பகவத்கீதையைவிட விளையாட்டுத்தான் ரொம்ப முக்கியமாகும் " " உங்கள் முதுகு வளையாமல், உங்கள் கால்கள் தளர்வுறாமல், நீங்கள் நிற்கும் போது தான், உபநிஷத்தின் நுட்பங்களையும் ஆன்மாவின் மகிமையையும் நன்குணர்ந்து கொள்வீர்கள் !"

வறுமையும் யந்திர நாகரீகமும்

அடுத்தபடியாக அவரது கவனத்தைக் கவர்ந்தது, இந்தியாவின் ஏழைமையே. இந்த ஏழைமையை நாம் எவ்விதமாகவாவது ஒழிக்கவேண்டும். நாம் வறுமையை அழிக்கத் தவறினால் அது நம்மை அழித்துவிடும் ! சுவாமி கூறுகிறார் : " வயிற்றுக்கடவுளை முதலில் திருப்தி செய்தாலன்றி, உங்கள் சமய உபதேசங்களுக்கு யாரும் செவிகொடார். முதலில் இந்தக் கொடிய பட்டினியை நீக்குங்கள்." இதற்கு வழிதான் என்ன ? " மேனாட்டுப் பௌதிக சாஸ்திரத்தைக் கற்கவேண்டும். தொழில் வளர்ச்சிக்குரிய கல்வி யறிவை நாம் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். " ஆனால் யந்திர மோகத்தில் மூழ்கினால், யந்திரங்களுக்கு அடிமையானால், அழிவு சர்வ நிச்சயம். மனிதர்களின் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கருவிகளாகவே யந்திரங்களைக் கருதவேண்டும். திண்ணை - வேதாந்தமல்ல, அனுபவ சாத்தியமான, அவசியமான புத்திமதி. யந்திரங்களை இவ்விதம் நோக்காதவரையில் இப்பொழுது தான் வசிக்கும் நரகத்திலிருந்து மனிதன் மீள்வது அசாத்தியம்.

பெண்மையை உயர்வு செய்க

மனித ஜாதியின் ஒரு பகுதி, முன்னேற்றத்தில் தனக்குரியபங்கைச் சரியாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கும்வரை, மனித முன்னேற்றம் பற்றிக் கனவு காண்பதுகூட மடத்தனம் என்று, பெண்களின் தற்கால நிலைமையைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது பேரறிஞர் பெர்னாட்ஷா கூறினார். இதற்குப் பல வருஷங்களுக்கு முன்பே நமது சுவாமி கூறியிருப்பதைக் கவனியுங்கள் : " சாதாரணமாக, நமது பழக்க வழக்கங்களை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்கு, ஸ்திரீகளுக்கு நமது சமூகத்தில் ஒரு தாழ்மையான ஸ்தானம் கொடுத்திருப்பதாகத் தோன்றலாம். ஆனால் அது, பல நூற்றாண்டுகளாகப் பலவகைச் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு அவசியம் என்பதனால் ஏற்பட்டதே ஒழிய, அவர்கள் தாழ்ந்தவர்கள் என்பதினால் அல்ல." பாதுகாப்பு மிகவும் உயர்ந்த, விலைமதிப்பற்ற, பொருளுக்குத் தானே அளிக்கப்படுகிறது ? ஆகவே, அந்தப் பழக்க வழக்கங்களே நமது ஸ்திரீகளின் அருமை பெருமைகளை எடுத்துக் காட்டுகின்றன. எனினும் ஸ்திரீகளின் தற்போதைய பிற்போக்கை விலக்க விவேகானந்தரின் உபதேசம் இது : "ஸ்திரீகள் தங்களுடைய பிரசினைகளைத் தாங்களே தீர்த்துக்கொள்ளும் படியான நிலைமைக்கு அவர்களைக் கொண்டு வந்து விடவேண்டும்."

இதற்குத் தேவையான, தகுதியான, கல்வி அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும். இப்பொழுது அவர்கள் பெறும் (Ready-Made) ' ரெடிமேட் ' கல்வி, சந்தர்ப்பங்களையும் தேவைகளையும் அறவே புறக்கணிக்கும் எதிர்மறைப் படிப்பு. இது தேவை அல்ல. சுவாமிஜியைப் பொறுத்த வரையில், ஒரு தேசத்தின் க்ஷேமத்திற்கு ஒரே ஒரு பரீக்ஷைதான்: " உங்கள் பெண்மக்களின் நிலைமையை உங்களால் உயர்த்த முடியுமா ? முடியுமானால் வருங்காலத்தில் க்ஷேமமடைவீர்களென்று நம்புவதற்கிடமுண்டு. இன்றேல், இப்பொழுதுள்ள கீழ்நிலையில் இருக்கவேண்டியதுதான். "

சாதிகள்

தற்போதைய சாதி - ஏற்பாடு நமது புராதன மதத்திற்கே இழுக்கு என்று

பலரும் கூறுகிறார்கள். ஹிந்து மதத்தின் பெருமைகளைக் காணமுடியாதவாறு இந்தக் குறைபாடு மறைத்து விடுவதாக வும் சொல்லுகிறார்கள். ஆனால் இவ் வாறு சொல்பவர்கள் ஹிந்து மதத்தைச் சரிவர அறிந்துகொண்டார்களா? சாதி-ஏற்பாடு ஒரு சமூக ஏற்பாடே ஒழிய, அதற்கும் சமயத்திற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதெனத் தீர்மான மாய், அழுத்தந் திருத்தத்துடன் கூறு கிறார் சுவாமிஜி.

"புரோகிதர்கள் என்ன பிதற்றினு லும் சரியே, சாதி என்பது ஒரு சமூக ஏற்பாடு என்பதில் சந்தேகமே இல்லை." ஆகவே அந்த ஏற்பாட்டில் குற்றங்குறை கள் காணப்படின், எவ்விதம் அவசிய மோ, அவ்விதம் அந்த ஏற்பாட்டை மாற்றிக்கொள்ளட்டும். இந்து தர்மத்தை ஏன் காரணமின்றிக் குறைகூறவேண்டும்?

ஆகவே மதத்தினின்று வேறுபட்ட நமது சாதி-ஏற்பாட்டின் தோற்றத்தைச் சற்றுக் கவனிப்போம். வகுப்புகளாகப் பாகுபடுத்துதல் மனிதர்களின் இயற் கைக் குணம். ஒரே தொழில் புரிவோர், அல்லது ஒரே விஷயத்தில் சிரத்தை கொள்வோர் ஒரு வகுப்பாகப் பரிண மிக்கிறார்கள் என்பது எதிர்பார்க்கத் தக்கதே. ஆனால் சாதி - ஏற்பாட்டில் இப்பொழுது தலைவிரித்தாடும் உயர்வு தாழ்வு-மனப்பான்மை ஒழிவது அவசியம் தான். பண்டைக்காலத்தில் ஏற்பட்ட பாகுபாடுகள் அர்த்தமில்லாதபடி மாறு தலடைந்து விட்டதாகவோ, அல்லது உருத்தெரியாமல் சிதைந்துவிட்டதாக வோ பெரும்பாலார் கருதினால், புதிய முறையில் சமூகத்தை அமைப்பதற்கு இந்து மதம் ஒருவிதத் தடங்கலையும் விளைவிக்கவில்லை.

தேசீயமும் சர்வதேசீயமும்

ஹிட்லர், முஸோலினியைப்போல் விவே கானந்தரும் ஓர் (Word Conguest) உலக சாம்ராஜ்யத்தைப் பற்றிக் கனவு கண்டார். ஆனால் சுவாமிஜியின் கனவு இந்தியாவின் ஆதிக்கத்தைப் பிறநாடு களின்மீது சுமத்தும் பேராசையின்மேல் எழுந்த மனக்கோட்டையில்லை. "சமயம், பாரமார்த்திகம் இவற்றின் வெற்றியே பாரத நாட்டின் வெற்றியாகும். உலகம் மற்றொரு முறையும் இந்தியாவினால் ஜயிக்கப்படவேண்டும்."

சுவாமியின் தேசீயம், "இப்பூவுலகிலே எந்தத் தேசமேனும் 'புண்ணிய பூமி' என்னும் பெயருக்கு உரிமையுடைய தானால் அது பாரதநாடேயாகும்" என்று பறைசாற்றுகிறது. ஆனால் சுவாமிஜியின் சர்வ தேசீயம், "உலகத் துடன் தொடர்பின்றி நாம் உயிர்வாழ முடியாது. அப்படி வாழமுடியுமென்று எண்ணியது நமது மடமையாகும்" என்று தெளிவாக எடுத்துக் கூறுகிறது. ஆகவே "இந்தியர்களே! யாத்திரை செய்யவேண்டும், வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டும். மற்ற நாடுகளில் சமூக வாழ்வு எவ்வாறு நடைபெறுகிறதென்று நாம் பார்க்கவேண்டும்."—என்கிறார்.

இந்தியாவின் திக்விஜயம்

மேற்குத் தேசங்களின் போக்கைக் கண்டு சுவாமிஜி கண்ணீர் சிந்தினார். அந்தத் தேசங்களில் 'உலகாயதம்' என் னும் தீ மக்களின் இதயங்களை எரித்து வருவது கண்டு மனமுடைந்தார். ஆனால் அந்தத் தீயை அணைப்பதற்கான ஜீவநீர் சமயம், - பாரமார்த்திகம்-பாரதநாட்டில் இருப்பது கண்டு களித்தார். ஆகவே உலக மக்களின் க்ஷேமத்தை நிலைநிறுத்து வதற்கு இந்தியா தனது அன்பின் வலிமை யினால் உலகத்தை வெற்றிகொண்டு சரி யான வழிகாட்ட வேண்டுமென்று எண்ணினார், கனவுகண்டார்.

இரண்டு உலக யுத்தங்களாலும், இப் பொழுது நாம் அனுபவிக்கும் உலக சமாதானத்தினாலுங்கூட, சுவாமிஜியின் கனவு மெய்யாக வேண்டியது எவ்வளவு அவசியம் என்று உணரலாம். விடுதலை யடைந்த இந்தியா இந்த உலக திக் விஜயத்திற்குத் தயாராக வேண்டும். சுவாமிஜியின் கனவு மெய்யானால்தான், நமது சுதந்திரத்தையும் சந்தர்ப்பங்களை யும் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வில்லை யென்ற குற்றச்சாட்டிலிருந்து நாம் தப்பமுடியும்.

உன் ஸாரிகள் இப்பொழுது எவ்வளவு சுத்தமாகவும் பளிச்சென்றும் இருக்கின்றன!
ஆம் - அது நான் ஸன்லைட் உபயோகிக்க ஆரம்பித்திருப்பதனால் தான்!
உங்கள் துணிகளை ஸன்லைட் சோப்பினால் சலவை செய்தால் அவை முன் இருந்ததை விட அதிக வெண்மையாகவும் பளிச்சென்றுமிருக்கின்றன. ஸன்லைட் சோப்பின் ஏராளமான நுரை இழைகளிடையே புகுந்து சேதமின்றி அடித்துத்துவைக்காமலே எல்லா மலினங்களையும் — ஜாஸ்தி அழுக்குப் படிந்த பாகங்களிலிருந்து கூட — அகற்றுகின்றது. இச்சோப்பினால் சலவை செய்யப்பட்ட துணிகளின் புதுமணத்தை நீங்கள் விரும்புவீர்கள். மேலும், உங்கள் கைகளுக்கும் ஸன்லைட் சோப் நன்மையளிக்கின்றது.
ஸன்லைட் சோப்
SUNLIGHT SOAP
Rs. 1000 Reward!
GUARANTEED
S. 89-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

திருவள்ளுவரும் பொதுச் சமயமும்

(சுவாமி பரமாத்மானந்தர்)

திருவள்ளுவர் என்னும் பொய்யில் புலவரது பெருமை, நாள் கழியக்கழிய, மக்களுடைய அறிவு பெருகப் பெருக, மேலும் மேலும் வளர்ந்து வருகின்றது. நமது தென்னாட்டுத் தமிழ் அறிஞர் பலர் அவரது பெருமையைப் பற்றிப் பல கட்டுரைகளையும் ஆராய்ச்சி யுரைகளையும் எழுதியுள்ளனர்; வடமொழி முதலாய பல மொழிகளிலும் திருவள்ளுவரது திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; மேலைநாட்டு அறிஞர் பலர் காய்தல் உவத்தலின்றிக் குறளைப் புகழ்ந்திருக்கின்றனர். இவ்வளவு பெருமை பெற்றுள்ள திருக்குறளின் ஆசிரியரைப் பல மதத்தினரும் தம்மவரெனக் கூறிக் கொண்டாடுவதில் வியப்பில்லை.

ஒவ்வொரு மதத்தினரும் தமது கொள்கைகளைச் சிறப்பாக எடுத்துரைக்கும் பாக்களைக் குறளினிடத்துக் காணுதலால், தம் மதத்தினர் என உரிமை பாராட்டுதற்குத் தக்க காரணங்களும் அவரவர்க்கு உள. ஆயினும் பிற மதத்தினர்க்குரிய சிறப்பான கருத்துக்களும் வேறிடங்களில் காணப்படுதலின், எவரும் தம் மதத்தினரென முடிவாகக் கூற வழியிலாது போகின்றது. திருக்குறள் தோன்றிய காலத்திற்குத் தொலையிலுள்ள பிற்காலத்தவர் திருவள்ளுவரது மதத்தினைப் பற்றிப் பலவாறாகக் கூறுவது கிடக்கட்டும்; சமகாலத்தவர் அதைப்பற்றி யாது கூறுகின்றனர் என்பதை அறிவது மிகவும் உண்மையானதும் பொருத்தமானதும் ஆகுமன்றோ?

திருவள்ளுவ மாலையினைப் பாடிய சீர்சான்ற சங்கப் புலவர்களில் எவரேனும் அவரை இன்ன மதத்தினரெனச் சுட்டியுரைக்கின்றனரோ என்று ஆராயின், அவ்வாறு கூறும் ஒருவரையும் காணல் அரிதாகின்றது. அம்மட்டோ! ஒரு புலவர் கூறுகிறார், "ஒரு சமயத்தினர் கூறியதை வேறொரு சமயத்தினர் ஒப்புக்கொள்வதில்லை. ஆனால் வள்ளுவரது குறளையோ எச்சமயத்தினரும் நன்றென ஒப்புக்கொள்வர்" என்று. "சமயக்கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் பொருள் இது என்ற வள்ளுவர்" என்று தெளிவாகக் கூறுகிறார் வேறிடத்தும். அன்றியும் 'எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பு' என்று திருக்குறளுக்கு உரைகண்ட ஆசிரியர் பலர்க்குள்ளும் சிறந்த பரிமேலழகர் கூறுகின்றார். மேலும் 'தமிழ்மறை' யென்றும், 'பொதுமறை' யென்றும் திருக்குறள் வழங்கப்படுகின்றது. திருக்குறளை வேதத்திற்கு இணையாகக் கூறும் சங்கப் புலவரும் மூவர் நால்வர் உளர். ஆதலின், எல்லாச் சமயங்கட்கும் வேதம் பொதுவான தாயகம் ஆதல்போல், திருக்குறளும் எச்சமயங்கட்கும் பொதுவான பிறப்பிடமாகும். தமிழ்ப் பொதுமறை என்பது மிகவும் பொருத்தமாகும். இத்தமிழ்ப் பொதுமறையில் திருவள்ளுவர் வெளியிடும் பொதுச்சமயத்தின் இயல்பை ஒருவாறு இனி ஆராய்வோம்.

திருக்குறளை வேதம் என்பதில் அடங்கியுள்ள இன்னொரு கருத்தும் அறியத்தக்கதாம். வேதம் முக்குணங்களில் எது தலையெடுத்தவர்க்கும் உரிய பகுதிகளை உடையது. இம்மை, மறுமை, வீடு ஆகிய மூன்றினையும் சார்ந்த இன்பங்களைப் பெறுவதற்கு ஏற்ற வழிகளை அது எடுத்தோதுகின்றது. கீழ்ப்படியிலிருந்து மேற்படிவரை எல்லாப் படிகளிலும் நிற்பார்க்கும் அவரவரது தகுதிக்கேற்பச் செய்ய வேண்டிய கருமங்களையும், பற்ற வேண்டிய இலட்சியங்களையும் எடுத்துரைக்கும். அறம், பொருள், இன்பம், வீடு எனும்

நான்கு உறுதிப் பொருள்களுள் எந்த ஒன்றை அடைய விரும்பினும், அதற்குரிய முறைகளை வேதத்திற் காணலாம். உயர்ந்த ஞானத்தைப்பற்றிக்கூறும் பாகங்கள் உபநிடதங்கள் எனப்படும் ; இவை வேதத்தில் மிகச் சுருங்கிய பகுதியேயாகும். திருக்குறளிலும் அவ்வாறே அறம் பொருள் இன்பம் இம் மூன்றையும் பற்றிய பகுதிகளே பெரும்பாலன ; வீட்டைப் பற்றியும் அதனை அடையும் நெறிகளைப்பற்றியும் கூறும் பகுதிகள் சுருங்கியன. துறவற இயலிலும்பாயிரத்திலுள்ள 'நீத்தார் பெருமை' ' கடவுள் வாழ்த்து ' எனும் அதிகாரங்களிலும் மட்டும் ஞான வாழ்க்கையைப் பற்றிய கருத்துக்கள் பெரும்பாலும் காணப்படுகின்றன. இவற்றையே நமது ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தல் வேண்டும்.

சமயம் எனப்படுவது, இறைவன் ஆன்மா நெறி வாழ்க்கைப்பயன் தடை என்னும் ஐந்தினையும் எடுத்தோதல் வேண்டும் என்பர் ஆன்றோர். இவ்வைந்தினையும் பற்றிய முடிபுகள் யாவும் ' கடவுள் வாழ்த்து ' அதிகாரத்தில் பொதுவாகவும், முதற்குறளில் சிறப்பாகவும் சுருக்கமாகவும் காணப்படுகின்றன. இவற்றை ஆராயின், திருவள்ளுவரது பொதுச்சமயத்தின் இயல்பு விளங்கும். இவற்றால் விளக்கப்படாது எஞ்சுகின்ற உண்மைகள் துறவற இயலில் விரிவாக உரைக்கப்படும் ; அவற்றையும் சேர்த்துக் கொள்வோம்.

இறைவனது தன்மையினையும் ஆன்மாவினது தன்மையினையும் இரண்டிற்கும் உள்ள தொடர்பையும் முதற்குறளே அழகாக ஓர் உவமையால் போதிக்கின்றது. அந்த உவமையாவது : அகரம் எல்லா எழுத்துகட்கும் முதற் காரணமாவதுபோல, இறைவன் உலகிற்கு முதற் காரணமாகின்றான் என்பது. அகரம் ஏனைய உயிரெழுத்துகட்கும் மெய்யெழுத்துகட்கும் முதற் காரணமாகின்றது. எவ்வாறெனில், அகர ஒலி வாயைத் திறக்கும் முயற்சியால் மட்டும் உண்டாவது ; அம்முயற்சியின்றி ஏனைய உயிரெழுத்துகளோ, மெய்யெழுத்துகளோ, உயிர்மெய் எழுத்துகளோ பிறத்தல் ஒண்ணாது. வாயைத் திறக்கும் முயற்சி எவ்வித எழுத்தொலிக்கும் அடிப்படை முயற்சியாகின்றது. வாயைத் திறக்கும்போது எழும் ஒலியே வாயிலும் தொண்டையிலும் உள்ள பல பகுதிகளால் மாற்றப்பட்டு, ஏனைய எழுத்துகளின் ஒலியாக வேறுபடுகின்றது. அகரம் ஏனைய உயிரெழுத்துகட்கும் மெய்யெழுத்துகட்கும் உயிரேயாகின்றது ; இவையனைத்தும் உடல்களாயின் அது அவற்றிற்குள் ஊடுருவி நிற்கும் உயிராகும். உடல்கள் உயிரின் உதவியன்றி இயங்கமாட்டாதன ; உயிரோ தனித்தும் கலந்தும் இயங்கும் இயல்புடையது. அதுபோல, அகர ஒலி தனித்தும் பிற எழுத்தொலிகட்கு இன்றியமையாத உறுப்பாகியும் விளங்குகின்றது. இம் மாதிரியே உலகத்திற்கும் இறைவன் உயிராகின்றான். உலகம் என்னுமிடத்து உயிருள்ளனவும் உயிரில்லனவுமாகிய இருபகுதிகளும் கொள்ளப்படும் ; உயிருள்ளன அகரமொழிந்த உயிரெழுத்துக்களையும், உயிரற்றன மெய்யெழுத்துக்களையும் ஒப்பன. இறைவன் தனித்தும் உயிர்களோடும் உயிரற்ற பொருள்களோடும் கலந்து நிற்கின்றான். இறைவன் உயிர்களை இயக்குவதும் (உயிரற்ற) பொருள்களை இயக்குவதும் கலந்த நிலையில்தான் ; இறைவனது துணையின்றி உயிர்களோ, சடப்பொருள்களோ இயங்கமாட்டாதனவாம். ஆணவத்தாலும் அறியாமையாலும் உயிருடைய மக்கள் தாமாக இயங்குவதாகப் பாவித்துக்கொண்டாலும் உண்மை அதுவன்று. உயிர்கள் உடல்கட்குள் புகுந்து ஆட்டிவைப்பதுபோல, இறைவன் உயிர்க்குள் புகுந்து அதனை ஆட்டிவைக்கின்றான்; அதனால் இறைவன் உயிர்க்கும் உயிராய் இருப்பவன் ஆகின்றான். ஆக, காணும் பொருள்களையும் உயிர்களையும் உட்புகுந்து ஆட்டிவைக்கும் மெய்ப்பொருள் ஒன்று உண்டு என்பதும், அது அவற்றோடு கலந்தும் அவற்றைக் கடந்தும் நிற்கும் கடவுள் என்பதும் பெறப்படுகின்றன.

இறைவன் உலகிற்கு உயிராயிருக்கும் தன்மையை ஸ்ரீராமகிருஷ்ணர் ஓர் இனிய உவமையால் நன்கு விளக்குகின்றார்.

அழகின் சிறப்பு

சருமசுகத்தின் மகிமையே

உங்கள் வசீகரம் பெரும்பாலும் மேனியழகை பொறுத்திருக்கிறது. மேனியழகு சருமசுகத்தினால் மட்டுமே ஏற்படுகிறது. சருமத்தைப் போஷிக்கும் குணமுடையதும் ஆன்டிஸெப்டிக்குமான தைலங்கள் சேர்ந்துள்ள கேடில் ரெக்ஸோனாவில் அடங்கியிருப்பதால் அது சருமத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதுமல்லாமல் சரும அழகு ஏற்படவும் உதவுகிறது. அதிசீக்கிரத்தில் தாராளமாயுண்டாகும் ரெக்ஸோனாவின் நுரை சருமத்திற்குள் சுகமளிக்கும் கேடிலை சேர்த்து ஆற்றலுடன் அழகையும் கொடுக்கின்றது. கேடில் கலந்துள்ள விசேஷமான சோப் இது ஒன்றே. அதனாலேயே, சருமத்தை மச்ச மறுக்களிலிருந்து பாதுகாத்து ஆரோக்கியத்தையளித்து ஒவ்வொரு மங்கையும் விரும்பும் மேனியழகைத்தரும் குணத்தை இச்சோப்புப் பெற்றிருக்கிறது.

ஆரோக்கிய மிகுதியால் சோபையடையும் சருமத்தை முக்கியமாகக் கருதும் ஆடவர்கள், ரெக்ஸோனாவின் சுறுசுறுப்பளித்து சக்தியை ஊட்டும் திறமையை மெச்சுவார்கள். சுகமான சருமமேற்பட விரும்பும் ஆடவர்களுக்கு, ரெக்ஸோனா இன்றியமையாதது என்று உண்மையாக சொல்லலாம்.

குழந்தைக்கு ரெக்ஸோனா: குழந்தையின் மெல்லிய சருமத்தில் புண்கள், சினைப்புகள் ஏற்பட வழியுண்டு. ரெக்ஸோனாவின் மருந்து சேர்ந்த நுரை சிறு கைகால்களை சாதாரண சரும வியாதிகளிலிருந்து காப்பாற்றுகிறது.

★ ரெக்ஸோனாவிலுள்ள கேடில், ஆன்டிஸெப்டிக்கும் சுகமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ கலப்பு மருந்து. இம்மருந்து சருமப் பாதுகாப்பிற்கு ரொம்பவும் உத்தமமானது.

சருமசுகத்திற்கு ரெக்ஸோனா

RP. 31A-23-40 TM

REXONA PROPRIETARY LIMITED

'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பர் ஆன்றோர்; இங்கே அணு வென்பது அணுவடிவமான உயிரையும், சடப்பொருள் - அணுவையும் குறிக் கின்றது. எப்பொருளும் எவ்வுயிரும் தனித்து நின்ற நிலையில் சுழியனையது என்பர் ஸ்ரீராமகிருஷ்ணர்; அதாவது அவை இருந்தும் மதிப்பற்றன. சுழி ஒன்றே ஆயினும், பல கூடி நின்றாலும், மதிப்பற்றதாகும்; எனினும் ஒன்று என்னும் இலக்கத்தோடு சேர்ந்து, அதன்பின் நிற்குமாயின், சுழிக்கு மதிப்பு ஏற்படுகின்றது. ஒன்று என்னும் இலக் கத்தின் மதிப்பை அதனோடு இணைந்து பின்நிற்கும் ஒரு சுழி பத்துமடங்காக்கு கிறது; சுழிகள் சேரச் சேர, இலக்கத் தின் மதிப்பு பத்து மடங்காகப் பெருகிக் கொண்டே வருகின்றது. ஒன்று என்னும் இலக்கம் தனித்து நிற்பினும் மதிப்புடையது; சுழிகள் பின் தொடர நிற்கும்போதும் மதிப்புடையது. அதுபோல, கடவுள் தனித்த நிலையிலும், கலந்த நிலையிலும் மதிப்புடைய பொருள் ஆவர். இறைவனை முதன்மையாகக் கொண்டு நிற்கும்போது, எப்பொருளும் எவ்வுயிரும், இருப்பையும், மதிப்பையும் சக்தியையும் பெறுவனவாகும்; அவனைப் பிரிந்த நிலையில் அனைத்தையும் இழந்து, இல்லாதனவுமாம். ஆக, இறைவன் உயி ராக, ஏனைய பொருள்களும் ஆன்மாக் களும் அவனது உடல்களே யாகின்றன; அவனையே உலகு முதன்மையாகவுடை யது. ஆக, கடவுள் உலகிற்கு உயிராகும் இயல்பு முதற்குறளில் கூறப்பட்டது. 'கடவுள் வாழ்த்து' எனும் அதிகாரத் திலுள்ள மற்றைய குறள்கள் கூறும் 'கடவுள் - இயல்புகளையும் நோக்குவோம்.

இரண்டாங்குறள், 'வாலறிவன்' எனக் கடவுளை உரைக்கின்றது; தூய அறிவு வடிவமானவன் என்பது இதன் பொருள். மூன்றுவது குறள், 'மலர்மிசை ஏகினன்' எனக் கடவுளைக் குறிக்கின்றது. அன்பாது நெஞ்சமாகிய தாமரை மலரிலே அவர் நினைந்த வடி விலே விரைந்து செல்லுபவன் என இது பொருள் படுதலின், இறைவன் அன்பு - வடிவினன் என்பது அறியப்படுகின்றது. நான்காங்குறள் கடவுளை 'வேண்டுதல் வேண்டாமையிலான்' என்கின்றது; இறைவனின் விருப்பு வெறுப்பற்ற தன்மை அவனது மன ஆற்றலை(மனத்தை அடக்கி ஆளும் ஆற்றலை)ப் புலப்படுத்து கின்றது. ஆக, இறைவன் தனித்த நிலையில் (அனைத்திற்கும்) உயிர்வடிவாயும், அறிவு வடிவாயும், அன்பு வடிவாயும், ஆற்றல் வடிவாயும் இருப்பவன் என்பது பெறப்படுகின்றது.

ஐந்தாங்குறள் 'இறைவன்' என்கின் றது; இறத்தல் என்பதற்குத் தங்குதல் என்பது பொருளாதலின், எப்பொருளி லும், எவ்வுயிரிலும் தங்குபவன் இறை வனாகிறான். ஆறாங்குறள் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்கின்றது. இறைவன் உலகத்தோடு ஒட்டியிருப்பினும், ஐம் பொறிகள் வாயிலாக எழும் ஆசைகளி னின்றும் இயல்பாகவே நீங்கினவன் என்பதால், 'ஒன்றிலும் ஒட்டாதவன்' என்பது பெறப்படுகின்றது. உலகத்து வாழ்ந்தும் உலகப் பற்றுக்களை அறவே ஒழித்த முனிவர் பலரை உலகம் தோற்று வித்துள்ளது; அவர்களைப் போன்ற வனாகாது, 'தனக்குவமையில்லாதான்' ஆகின்றனன், இறைவன்—அதாவது, அவன் முக்தரினின்றும் நித்யரினின்றும் வேறுபட்டவனாய் அவர்கட்கும் அதிபதி யாவான். இன்னும், உலகத்தை ஆட்டி வைக்கிற நிலையிலே இறைவன் அறநெறி யிலே அனைவரையும் உய்த்தலின், அவன் அறத்திற்கு ஆழியாகின்றான்; ஆயினும் உயிர்களை ஆட்கொள்ளும்போது கருணை வள்ளலுமாகின்றான். எனவே எட்டாங் குறள் கடவுளை 'அறவாழிஅந்தணன்' என்கின்றது. ஆக, இறைவன் உலகத் தோடு கலந்து நின்ற நிலையிலேயும் நான்கு இயல்புகளை யுடையவனாகின்றான்.

ஒன்பதாங்குறள் இறைவனை 'எண் குணத்தான்' என்று சுட்டுகின்றது. எஞ்சிய பத்தாவது குறளில் 'இறைவன்' எனும் பழைய பெயரன்றிப் புதுப் பெயரில்லை. 'எண்குணத்தான்' என்பதற் குப் பல உரையாசிரியர் தத்தம் மதச் சார்புகட்கேற்ப வெவ்வேறான எட்டுக் குணங்களைக் கூறுகின்றனர். ஆனால் இந்நூல் 'சமயக் கணக்கர் மதிவழி

கூறாத' நூலன்றோ? ஆதலின், புறநூல்களினின்றும் எட்டுக்குணங்களைக்கூறாது, திருக்குறளினின்றே எட்டுக்குணங்களைப் பொறுக்கி எடுத்தல் பொருத்தமாகும். அக்குணங்களாவன முதல் எட்டுக்குறள்களிலும் சுட்டப்படும் குணங்களே; கடந்த நிலையில் இறைவனிடம் காணப்படும் நான்கு இயல்புகளும், கலந்த நிலையில் அவனிடம் விளங்கும் நான்கு இயல்புகளும், ஆக எட்டுக்குணங்களாம். அவையே முன்பு எடுத்துக் காட்டப்பட்டன; எச்சமயத்தார்க்கும் பொதுவான எண்குணங்களாகின்றன.

அகரம் ஏனைய உயிரெழுத்துக்களோடும் மெய்யெழுத்துக்களோடும் கொண்டுள்ள தொடர்பை மூன்று வகையாகக் கருதலாம். அகரமும் மற்ற எழுத்துக்களும் வெவ்வேறானவை என்றும், ஆயினும் அகரத்தையே சார்ந்து மற்றவை நிற்கின்றன என்றும் கருதுவது ஒரு வகை. அகரமும் மற்ற எழுத்துக்களும், உயிரும் உடலும்போல் வெவ்வேறாயினும் அனைத்தும் சேர்ந்து ஒரே திரள் ஆகின்றன என்று கருதுவது இன்னொரு வகை. அகர ஒலியே வெளிப்படும்போது பலவாறு பலகுரல் சம்பந்தமான உறுப்புகளால் மாறுபாடடைதலின், உண்மையில் ஒலி ஒன்றே யென்றும், பெயரும் வடிவும் வேறுபட்டுப் பல ஒலிகளாகக் கேட்கப்படுகின்றது என்றும், அசையும் வாயுவே ஒலியை உண்டுபண்ணினும் அசைவற்ற வாயுவே அகரமுதலாய எல்லா ஒலிகட்கும் ஆதாரமாம் என்றும் கருதுவது இன்னொருவகை. இதுபோல் கடவுளும் உயிரும் பொருள்களும் மூன்றும் வெவ்வேறாகக் கடவுளையே சார்ந்து மற்றவை தரிக்கின்றன என்னலாம்; இது துவைத மதமாகும். உயிர்களையும் பொருள்களையும் ஊடுருவி நின்று இயக்குபவர் கடவுளே என்றும், அவரே அனைத்திற்கும் உயிரென்றும் கருதலாம்; இது விசிஷ்டாத்வைத மதமாகும். ஸகுணக்கடவுளும் உயிர்களும் பொருள்களும் நிர்க்குணக் கடவுளின் பலவேறு வடிவங்களும் பெயர்களுமாம் என்றும், அந்நிர்க்குணக் கடவுளே மெய்ப்பொருள் என்றும், மற்றவை தோற்றங்கள் என்றும் கருதலாம்; இது அத்வைதமாகும். ஆக, முதற்குறளிலுள்ள உவமை பல மதக் கருத்துகட்குப் பிறப்பிடமாகவும் அமைகின்றது. இதனால் திருக்குறள் வேதம் போன்று பல மதங்கட்கும் தாயகமாதலும் விளக்கப்படுகின்றது. முதற்குறள் பொதுமறையாதற்குச் சான்று பகர்கின்றது.

'எண்குணத்தான்' என்பதொழிய, வேறு கடவுளியல்புகளையும் இனி அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.



நன்கோ பிரிண்ட் இங்கி

இந்தியா, சென்னை, பீஹார், மைசூர், திருவாங்கூர் சர்க்கார்களாலும், சென்னையிலும், வெளியூர்களிலும் உள்ள பிரிண்டர்களாலும் மிகவும் உபயோகிக்கப்படுகிறது.

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

S. நாராயணன் & கம்பெனி

1, கிண்டி ரோடு, அடையாறு, சென்னை.

சிறுகதை

வாலத்தின் வைராக்கியம்

எம். எஸ். கமலா

பங்குனி மாதக்கடைசியுமாகி விட்டது. வெயில் வெகு கடுமையாய் இருக்கிறது. பகலில் காய்ந்த கதிரவனின் கடுங் கிரணங்களின் சூட்டைப் பொறுக்காமல் இயற்கை யன்னை வெதும்பி மூச்சு விடுகிறாளோ?—என்னும்படி வெந்து கொண்டிருந்தது. பறவைகள் கூடக் கூண்டில் அடைபட்டிருக்கச் சக்தியற்று நல்ல காற்றுக்காக இறகை அவ்வப்பொழுது பட பட வென்று அடித்துக்கொண்டு கிளைக்குக் கிளை தாவிக்கொண்டிருந்தன.

பண்ணையர் பசுபதி ஐயர் வீட்டு முற்றத்தில் பெரிய கோரைப்பாய் விரித்திருந்தது. சிறுவர் சிறுமியர் படுத்திருந்தனர். முற்றத்தை ஒட்டினாற் போலிருக்கும் தாழ்வாரத்தில் குழந்தைகளுக்குத் துணையாயும், இரவில் ஆர்ப்பாட்டம் செய்யும் எலி பூனைகளின் அமளியைக் கவனித்துக் கொள்ளவுமாய், இல்லத் தலைவி (பசுபதி ஐயரின் மனைவி) படுத்திருந்தாள். சுமார் நாற்பது வயதிருக்கும். குடும்பக் கவலையில் அடிபட்டவள். வேலை செய்த அலுப்பு ஒருபுறம். வயதுவந்த பெண்ணுக்கு வரன் கிடைக்காத வேதனை ஒருபுறம். போதாக் குறைக்குப் புழுக்கம் ஒருபுறம். 'அச்......உச்' என்று புரண்டு கொண்டிருந்தாள். தெருத் திண்ணையில் வயது வந்த இரண்டு பிள்ளைகள் ஆளுக்கொரு திண்ணையில் அவ் வீட்டைக் காப்பவர்கள்போல் படுத்திருந்தனர்.

ஐம்பது வயது நிறைந்த பசுபதி ஐயர் - முற்றத்தில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தவர் - ஏதோ யோசனை செய்து கொண்டு வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் சிந்தனைக்கு முடிவு ஏற்படவில்லை. நடு நடுவில் மனைவியின் பெருமூச்சு, மறைந்த யோசனைக் கிடையில் சிக்குண்டு நிலைநிற்று. அவர் வெறுப்புடன் யோசனையில் கனத்த உடலை முறுக்கிக்கொண்டு சோம்பல் விட்டபடி புரண்டு படுத்தார்.

அன்று பௌர்ணமி கழிந்து எட்டாம் நாள். கிருஷ்ணபக்ஷ அஷ்டமி. ஒரு மணிக்குச் சந்திரோதயம். பசுபதி ஐயர் திரும்பிப் படுத்ததற்கும், தேய்ந்த சந்திரன் மேலே வருவதற்கும் சரியாய் இருந்தது. அவருக்குப் படுக்கை கொள்ளவில்லை. மெள்ளக் கட்டிலை விட்டு எழுந்தார். மனைவியின் அருகில் அமர்ந்து, "தூங்கலையா?" என்று கேட்டார்.

"தூக்கம் வேறு வருகிறதா? குழந்தைகள் ஒரு பக்கம். வயசுவந்த பெண் ஒரு பக்கம். அடிவயித்துலே நெருப்பைக் கட்டிண்டு ராவும் பகலும் பாத்துக்க வேண்டியிருக்கிறது. வேலையோ தலைக்குமேல்...படுத்தால் காலும் கையும் குடைகிறது. என்றைக்குத்தான் விடிவோ?" என்றாள் சலிப்புடன்.

"உன் உடம்புதான் எவ்வளவு சேவலமாய் விட்டது! அந்த அழகிய மேனியே இல்லையே. 'பார்வதியைப் பாரு: பச்செப் பசுக்க எப்படியிருக்கிறாள்!' என்று சொன்ன வாயெல்லாம் இப்பொழுது பார்த்தாத்தான் தெரியும்!" என்றார்.

"இன்னும் பாலியமோன்னோ, மேனி மினுமினுப்பும் சதைப் பிடிப்பும் அதிகமாக. இன்னிக்கா? நேத்தா? முப்பது வருஷமா இந்தக் குடும்பத்துக்கு உழை

த்து உழைத்து வேர்வையாய் வடித்தாயிற்று; பிள்ளையும் குட்டியும் பெத்து உடம்பும் உடைசலாய்ப் போய் விட்டது! அப்பாடின்னு ராத்திரி தனியாய்ப் புரண்டு படுத்து, விசாரமில்லாமல் இரண்டு வாய் சாதம் இன்பமாய்ச் சாப்பிட்டுச் சாவோமோ, இல்லையோன்னு கூடத் தோணிவிட்டது. தலைவலி போனால் திருகுவலி என்பது போல் அப்போ அந்த விசாரம். இப்போ அவளுக்குக் கல்யாணமாகணுமே! 'இவனுக்குப் பரீக்ஷை பாஸாகணுமே!' 'இவனுக் கொருவேலை கிடைக்கணுமே!' இப்படியே முடிவில்லா யோசனையும் வேதனையும்தான். ஹூம். பெண்ஜன்மம் என்ன சுகத்தைக் காணும்....இதுதான்" என்றாள்.

கிழவரும் தம் கன்னத்தைத் தடவியபடியே இரத்தம் உலர்ந்த கண்களில் ஒரு கர்வம் மின்ன, "இப்போதான் நிம்மதியா யிருக்கையே!" என்றார்.

"போதுமே! உங்கள் உருக்கம். இன்னும் பாவியம் திரும்பாதோ? நாலரைக் கழுதை வயசாச்சு. (ஒருகழுதையின் ஆயுள் பிரமாணம் பத்துவயது) இன்னும் பதினாறு வயசுபால குமாரியாய் இல்லையேன்னு குறை! பங்குனி முடியப் போகிறது, எங்காவது நிச்சயம் செய்யற உத்தேசம் உண்டா இல்லையா?"

"அதைத்தான் நானும் சொல்ல வந்தேன்."

* * * *

வான முகப்பில் தோன்றிய தேய்ந்த சந்திரன் குறைநகை செய்துக்கொண்டே மேல் நோக்கிவந்தான். "ஊம். சொல்லுங்கள்" என்று ஆவலாய்க் கேட்டாள்.

"மத்தியானம் போனேனே ஜோஸ்யராத்துக்கு......." என்று முழுவதும் சொல்வதற்குள், "ஆமாம், கேக்க மறந்தே போனேன். எத்தனையோ வேலை!" என்று எழுந்து உட்கார்ந்து காலை நீட்டிக்கொண்டு, "அதில் ஏதாவது பொருந்தியிருக்கா?" என்றாள்.

"ஆனாலும் உன் உடம்பு இவ்வளவு மோசமாயிருக்கிறதே!" என்று பரிதாப்

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்.

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச் சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்,
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு

"லக்ஸ் டாய்லட் சோப்
உங்கள் சருமத்தை
சுத்தமாகவும், கவர்ச்சியுடைய
தாகவும் செய்யட்டும்" என்கிறார்
குமாரி என். ராஜம்

LTS. 168-111-40 TM LEVER BROTHERS (INDIA) LIMITED

மாய்ப் பார்த்தார். 'என் உடம்பைப்பற்றிய கவலை அப்புறமாகட்டும். ஜோஸ்யர் என்ன சொன்னார்?

"அதில்ஒண்ணும் சுவாரசியமில்லை...." என்றார்.

"ஏன்? கறுப்பு சீதாராமன் பேரன்?"

"அது ஷஷ்டாஷ்டகமாம்"

"அடாவழக்கு ராமசாமியின் பிள்ளையது?"

"அதிலென்னவோ சுக்கரதோஷமாம். மேலும் அவன் ஜாதகரீதியாய் இன்னும் இரண்டு வருஷத்தில் ஒருகண்டம் இருக்கிறதாம். பிழைப்பானாம். ஆனாலும் அதற்கப்புறம் கல்யாணம் செய்வது சிரேஷ்டம் என்று சொல்லி விட்டார்."

"முதல் புள்ளி ரெண்டும் சேரவில்லை. அப்புறம்......"

"சுப்புப்பாட்டி பேரனது சேர்ந்திருக்கு. அவன் ஆனாலும் கறுப்பு. அத்துடன் ஒருகால்...எனக்குச் சம்மதமில்லை. அப்பைய தீட்சிதர் பிள்ளைக்குக் கொடுத்து விடலாம்னு யோசனை செய்தேன். ஐந்தேக்கரா நிலம் இருக்கிறது. அவர் கணக்கு வேலையும் அவனையே சேரும். ஏதோ கால்வயிறு பசியாக்கஞ்சி குடிப்பாள். உள்ளூரிலே..."

'நன்னாயிருக்கு. அவாத்துலே குடுக்கறதைவிட கழுத்தைப் பிடித்து கெணத்துலே தள்ளலாம்."

"ஆனால் அதம பக்ஷம் ஒண்ணுன்னு வெச்சுண்டிருக்கேன். அதையும் சொல்லிவிடுகிறேன் கேள். கோடியாத்து கோபாலையர் மச்சினன் ஏதோ பெரிய உத்தியோகத்திலிருக்கிறானாம்......."

"ஆமாம். அதுக்கென்ன? அவர் பொண்டாட்டி தைப்பூசத் தன்னிக்கு செத்துப் போனா. விக்கிரகங்களாட்டமா அஞ்சோ, ஆறோ குழந்தைகள். பெரிய பிள்ளைக்கு இருபது வயசுதானாகிறது. பி. ஏ. படிக்கிறான். முப்பத்தஞ்சு வயசில் மஹாராஜி மஞ்சளும் குங்குமுமாய் ....கல்யாணத்துக்குப் பெண் இருக்கு!" என்றாள் மடமடவென்று.

"அவருக்குத்தான் நம் வாலத்தைக் கோபாலையர் கேட்கிறார் என்னும் போதே......."

"உத்தியோகமும் காசும் யாருக்கு வேணும்? கொண்டுபோய் உடைப்பில் போடுங்கள். அந்தக் கிழத்திற்கு வாலத்தைக் குடுக்கக்கூடாது. இப்பவே நம் வாலத்துக்கு வயசு என்ன ஆச்சு தெரியுமா?" என்றாள். அவர் பேசாமல் மௌனமாய் அந்தம்மாளையே பார்த்தார். "தெரியலையா? பதினஞ்சு ரொம்பிடுத்து. ஆகட்டுமே. சட்டம் சட்டம்னுதான் ஒண்ணு நம்மை சங்கடத்தில் வைக்க இருக்கிறதே! முப்பது வயசுக்குக் கூட பண்ணலாம்னு. நாளுக்கு நாள் வயசு ஏறத்தான் ஏறும், குறையாது. நல்ல வரனைப் பார்த்துக் கொடுப்பது. இப்போ அவசரப்பட்டுண்டு எங்கேயாவது தள்ளறதுன்னு ஆகாது."

கிழவர் மெள்ளக் குரலை கனைத்துக் கொண்டு, "ஆனா, நான் ஒன்று சொல்லுகிறேன் கேள், உன் தம்பி தாமோதரனை வாலத்தைக் கல்யாணம் செய்துக்கொள்ளும்படி சொல்லு. நமக்கும் கைசலிச்சுப் போச்சு?"

"உங்களுக்கு முன் நான் சொல்லியாச்சு. அவன் சொன்னான்: 'அக்கா! நீ பெத்தாலென்ன? நான் பெத்தாலென்ன? வாலத்தை என் பொண்போல வளர்த்துவிட்டேன். அவள் கல்யாணத்துக்கு என்ன செலவாறதோ நான் கொடுத்து விடறேன்'னுட்டான்."

"என்ன? இந்த எக்ஞேச்வரன் பிள்ளை பசுபதியா, ஒருவன் பணத்தால் தன் குழந்தைக்குக் கல்யாணம் செய்பவன்? தெருவிலே போற ஏழையைக் கூப்பிட்டு அவன் கையில் பிடித்துக் கொடுப்பேனே ஒழிய......."

"ஏன் அவ்வளவு பதட்டம்? நீங்க மாத்திரம் ரோஷத்தில் முன்னுக்கிப்போ எவ்வளவு குறைந்திருக்கிறீர்கள்? என்னை மாத்திரம் சொன்னேளே குறும்புத்தனம்னு....வாலத்தை அஞ்சு வயசுக் குழந்தையாயிருக்கும்போதே அழைத்துக் கொண்டுபோய் வைத்துக்கொண்டு

படிப்பு, பாட்டு, எல்லாம் சொல்லிக் கொடுத்து...ஊம்...அதுக்குச் சரியாய் அவன் பொண்டாட்டியும் சாகவே, வயசுவந்த பொண்ணை வச்சுக்க லாயக்கில்லைன்னு கொண்டு வந்துவிட்டான். நாம் அவனுக்கு என்ன செஞ்சோம் என்பதைத்தான் விரலை மடித்துக் காட்டுங்களேன், பார்க்கலாம். அத்தனை நகையும் பண்ணிப்போட்டிருக்கான். அவன் சொல்வதும் நியாயம் தானே! அப்பொ நம்ப பெரிய பொண் செத்ததும், லலிதாவை அவனுக்கே இளையாளாய்க்கேட்டபோது உங்களுக்கு என்ன கோபம் பொத்துண்டு வந்தது? இப்பொ தாமோதரனுக்கு மாத்திரம் கொடுக்கலாமா?" என்றாள், நிதானமாய் சொற்களில் அழுத்தம் ஒலிக்க.

"இனி அதைப்பத்திப் பேசாதே! அவன் பண்ணிக்க மாட்டான்னா விட்டு விடு. பெரிய குளத்தில் கேட்கிறார்கள், கொடுத்துவிடுகிறேன். இனி என்னால் சுத்தமுடியாது. இந்தப் பஞ்சகாலத்தில் என்ன செய்வது? பெரியவன் நாலு குழந்தைகளுக்கு அப்பனாயிருந்தும் அவனுக்கு ரூபாய் அனுப்பவேணும். ரெண்டாமவன் பொண்டாட்டியை அழைக்க வேணும். மூணாமவனுக்கு இவள் கல்யாணத்துடன் சாந்திபண்ணி விடலாமென்று நினைக்கிறேன்."

"ஐயோ! பெரியகுளம் என்னும் பேரே என் வயித்தைக் கலக்கிறது. மீனாளை அங்கு ஓஹோன்னு கொடுத்த தற்கு, சாந்தி செய்து விட்ட பெண் மறுபடியும் வீட்டு வாசலை மிதிக்காமல் கண்ணை மூடினாள். உங்களுக்குப் புண்யமாயிருக்கும். வேறே எங்காகிலும் பாருங்களேன்" என்றாள் பரிதாபமாய்த் துக்கம் பொங்க.

"நான் சொல்வதை கொஞ்சம் நிதானமாய்க் கேள். நீ குடித்தனத்துக்கு வரும் போது முப்பது ஏக்கரா நிலமும் இந்த வீடும், நாலுரூபாய் ரொக்கமும் இருந்தது. இப்போ என்ன இருக்கிறது தெரியுமோ?"

"ஏன்? இருபதேக்கரா?"

"அதுதான் இல்லை. ஐந்தேக்கரா நிலமும், இந்த வீட்டின் மேல் ஆயிரம் ரூபாய் கடனும் இருக்கிறது."

"ஐயோ!" என்றலறிவிட்டாள்.

"இரையாதே! சொல்வதை நிதானமாய்க் கேள். பெரிய குளம் சின்னசாமி ஐயரின் பிள்ளை அப்பாசாமிக்கு வாலத்தைக் கொடுக்கும்படி அவரே கேட்டனுப்பினார். நம் நிலைமையை யோசித்ததில் அது உசிதமாய்ப் பட்டது."

"அந்தப் பிள்ளை துப்புக்கெட்டது. ஒண்ணும் தெரியாதுன்னு கேள்விப் பட்டிருக்கேன், ஏதோ அத்தை பொங்கிப்போட்டால் தின்னுட்டு திண்ணையுடன் விடிய விடிய சீட்டாடிண்டு இருக்குன்னு சொல்லுவார்களே! அதுக்குக் கொடுத்தால் கொழந்தைக்கு என்ன சுகம்?"

"வாஸ்தவம்தான். அந்தப் பையனைப் பத்தி நமக்கனாவசியம். பண்ணையார் சின்னசாமி ஐயர் நல்ல கெட்டிக்காரப் பேர்வழி. கையில் பத்துக்கு ரொக்கமிருக்கிறது. நாற்பது ரூபாய் பெறுமான நிலம் இருக்கிறது. பெண்ணும் நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டிருக்காள். வாலத்தை அந்தப் பிள்ளையாண்டானுக்குக் கொடுத்துவிட்டு மெள்ளக் குழந்தையின் பேருக்குச் சொத்தை எழுதிவிட்டால் போகிறது. நாம் கண்ணை மூடும்வரை மானமாய்க் கஞ்சிகுடிக்க வேணுமானால் அப்படித்தான் செய்ய வேணும். அதிகமாய் ஆசைப்பட்டால் கலியாணம் முடிந்து இவள் மாமியார் வீட்டுக்குப் போனதும் நாமும் இவ்வூரையே துறந்து எங்காகிலும் போக வேண்டியதுதான், வயிறு வளர்க்க."

* * * *

கல்யாணம் நிச்சயமாய் விட்டது. ஊர்முழுவதும் "பட்டாணிச்சி மாதிரி இருக்கும் வாலத்துக்கு இந்த ரெண்டுங்கெட்டான் அப்பாசாமியா கிடைக்க வேணும்? அவள் படிப்பென்ன? பாட்டென்ன? குழந்தைகளில்லாத மாமன் வளர்த்த அருமையென்ன? என்னவோ தெய்வ எத்தனம். ஆனதுக்கொரு ஆகா

தது, ஆகாததற்கொரு ஆனது !" இப்படிப் பலவாறு பேசும் பெண்களின் பேச்சுவாலத்தின் காதில் விழுந்து அவள் மனம் முறிந்து விட்டது. "ஆம், தந்தையாயினும் தாயாயினும் பிற்காலத்தில் தங்கள் சௌக்கியத்தை உத்தேசித்துத்தானே என்னைக் கல்யாணம் என்ற கடனிலிருந்து விடுபடச் செய்து, தாங்களும் கடனாளியாகாமலிருக்க அசடனை கணவனுக்கு உயிருடனேயே கொடுத்து, வதைக்காமல் வதைக்கிறார்கள் !" என்றெல்லாம் தோன்றும். அச்சமயம் அவள் மாமன் தாமோதரன் அவள் மனத்திரையில் ஆடுவான்.

ஆனால் அந்த உருவத்தின்பால் தந்தைக்குஅளிக்க வேண்டிய மரியாதை, கௌரவம், கண்யம் தவிர காதல் கோட்டின் நிழல் கூடச் சாயாது. ஆனால் தந்தையின் கஷ்டத்தை அவர் வாய்மூலமாகவே தாயிடம் சொன்னதைக் கேட்டவளாதலால் தங்கள் வம்ச கௌரவத்திற்காக, பெற்றோர்களின் நன்மைக்காக, தங்களைத் தியாகம் செய்த வீர நங்கையர்களை நினைத்துக் கொண்டாள். தன் கலியாணத்தினால் தன் பிறந்த வீட்டிற்கு ஏற்படப் போகும் நன்மையை நினைத்து வாயை மூடி யந்திரம்போல் சுற்றிவந்தாள்.

கல்யாணம் நடந்தது. கட்டை குட்டையான சரீரம். கட்டுக்குடுமியுடன் கையில் வெற்றிலைப் பெட்டியுடன், அப்பா சாமியைப் பார்க்கும்போதே அவள் கண்களில் நீர் துளித்து விட்டது. மாப்பிள்ளையின் சகோதரி மங்களம் வாலத்தைப் பார்த்ததும், "எங்கப்பா வம்சத்தை விளக்கடி கண்ணே !" என்று கட்டியணைத்தாள். அவள் அணைப்பில் ஆத்ம சாந்தி ஏற்பட்டது வாலத்திற்கு.

வைகாசிமாதம். பெரிய குளத்தில் சின்னசாமி ஐயர்வீடு அமளிப் படுகிறது. அவர் நாட்டுப் பெண்ணை வீட்டிற் கழைக்கப் போகிறார். கிரகப் பிரவேசம். பசுபதி ஐயர் தம் குடும்பத்துடன் வாலத்தை அழைத்துக் கொண்டு வந்திருந்தார்.

அன்று மாலை ஐயர் ஊருக்குப் புறப்படப் போகிறார். மங்களம் கிணற்றடியில் ஏதோ வேலையாயிருந்தாள். வாலம் அவளிடம் சென்று, "அக்கா ! நீங்கள் கூட இன்று ஊருக்குப் போகிறீர்களா ?" என்றாள்.

"இல்லையடியம்மா ! உங்களையெல்லாம் இன்னிக்கு அனுப்பிவிட்டு நாலஞ்சு நாள் பொறுத்துப் போவேன். அத்தைக்குக் கண் தெரியாது. வேலைக்காரி நன்னா வேலை செய்தாலும் திருடு. ஆனதால் சாமான்களையெல்லாம் தேய்த்து பரணிலே போட்டுவிட்டுப் போவேன்."

"நான் ஊருக்குப் போகல்லை" என்றாள் வாலமும் அழுத்தலாய். மங்களம் அவள் சொல்லைக் கேட்டதும் வெறிக்க வெறிக்க அவளையே பார்த்தாள்.

"ஆமாம், அக்கா !" என்றாள் நிதானமாய் வாலம்.

அவள் ஆச்சரியத்துடன் கண்களை அகலத்திறந்து "என்ன வாலம் ?" என்றாள். அவள் மனதில் தோன்றியது, "அழகும் படிப்பும் சங்கீதமும் பொங்கி வழியும் இவள் நம் தம்பியிடம் எந்த வசீகரத்தைக் கண்டாள் ? உடன் பிறந்த நானும் என் தந்தையுமே அவனால் ஆகர்ஷிக்கப்படவில்லையே ! எதைக் கண்டு நீ இச்சை கொண்டாய் மகளே " என்று.

"எனக்கு இங்கேயே இருந்துவிட வேண்டும்போல் இருக்கு. அப்பாவிடம் சொல்லி என்னை இப்ப அனுப்ப முடியாதென்று எங்க அப்பா அம்மாவிடம் சொல்லிவிடச் சொல்லுங்களேன் "

"அவா என்ன நினைப்பா ? இப்ப திடீரென்னு சொன்னால்?"

"நினைப்பதென்ன ? வீட்டில் வளைய வரப் பெண் இல்லாததால் வைத்துக் கொண்டார்களென்று " என்றாள்.

பசுபதி ஐயர் சின்னசாமி ஐயர் விருப்பப்படி வாலத்தைவிட்டுத் தங்களூர் சென்றார்.

இன்று மங்களம் பிரயாணம். அதே கிணற்றடியில் மங்களம் முகம்

கழுவிக்கொண்டே, "வாலம்! விராயி மேல் ஒரு கண்வைத்திரு. அத்தைபாலேயே அப்பாசாமி பாதி கெட்டான். எப்பேர்ப்பட்டவனும் சாதாரணமாய் மனைவிக்குக் குறுக்காய்ப் போகமாட்டான். அப்பாசாமியைத் திருத்தவேண்டியது உன் பொறுப்பு. அப்பா அவனைத் தாயில்லாப் பிள்ளையென்று செல்லம் கொடுத்துத் திண்ணையை விட்டசையாமல் செய்துவிட்டார். சமத்தாயிரு. நானும் அடிக்கொரு முறை வந்து பார்த்துக் கொள்ளுகிறேன்." என்றாள்.

* * * *

சின்னசாமி ஐயர் காலில் செருப்பை மாட்டியபடியே, "அப்பாசாமி! திண்ணையிலேயே உக்காந்திரு. அடுத்த கிராமம் வரை போய் வருகிறேன்" என்றார்.

"ஆகட்டுமப்பா!" என்று அப்பாசாமியின் குரல் கேட்கும்போது வாலம் விராயி சகாயத்துடன் வீட்டை அதி நேர்த்தியாய்ச் சீர்திருத்திக் கொண்டிருந்தாள். "திண்ணையிலேயே உக்காந்திரு" என்ற மாமனாரின் சொல்லைக் கேட்டதும் தன் நாத்தனார் சொன்னது நினைவிற்கு வந்துவிட்டது. அப்பாவே அவருக்குச் செல்லம் கொடுத்துத் திண்ணையை விட்டிறங்காமல் செய்து விட்டார்! ஒரு தந்தை மகனுக்கு......மகனை அறிவாளியாக்க நினைக்கும் வழி, கற்பிக்கும் வழி இதுவா? அவள் தலை 'கிர்' ரென்று சுழன்றது. அப்படியே சற்றுச் சுவரில் சாய்ந்தாள்.

அம்மா! ஏம்மா "ஏதாச்சும் சாப்பிட்டீங்களா? இல்லையா?" என்றவிராயியின் குரல் அவளை விழிப்படையச் செய்தது. தன் வேலையில் முனைந்தாள். படுக்கையறையில் கட்டில், மேஜை எல்லாவற்றையும் சுத்தம் செய்து, மேஜைக்கு எதிரில் கண்ணாடியை மாட்டினாள். மேஜைமேல் வெற்றிலைப் பெட்டி, தமிழ் நாட்டுச் சிறுகதைப் புஸ்தகங்கள் சில, ஷேக்ஸ்பியர், திருக்குறள் திவ்யப் பிரபந்த சாரம். முதலியவைகளை அழகு பெற அடுக்கிவைத்தாள், கண்ணாடியின் அருகில் ஸ்டாண்டில் கூந்தல் தைலம், ஸ்னோ, பௌடர், சீப்பு முதலியவைகள். வேலை ஒருவிதமாய் முடிந்தது.

"வாலம்! அப்பாசாமியை எண்ணை தேய்த்துக்கொள்ளச் சொல்லடீ!" என்று அத்தையின் குரல் அடுக்களையிலிருந்து வந்தது.

குளிக்கும் அறையில் அப்பாசாமி மிரள மிரள விழித்துக்கொண்டு நின்றான். சோப், டவல், விளாவி வைத்திருக்கும் வெந்நீர் எல்லாம் சித்தமாயிருந்தன. அத்தை எண்ணெய் தேய்த்தால் அதிகவேலை செய்து கட்டையைப் போன்று மரத்திருக்கும் கைகளால் எண்ணெயைக் கண்ணிலும் மூக்கிலும் வழியவிட்டு, கட்டுக்குடுமியை இப்படியும் அப்படியும் புரட்டி நகங்களால் பிறிவிடுவாள். எண்ணெய் தேய்த்துக் குளிப்ப தென்றால் அவனுக்கு எம வேதனைதான்.

பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு நிற்கும் அந்த இருபதாம் நூற்றாண்டு ரிச்யசிருங்கனைக் கண்ட வாலம், "ஏன் குளிக்கவில்லையா?" என்று தன் அழகிய குரலில் கேட்டாள். அவன் முகத்தில் அசடுவழிய 'ஊம்' என்றான். உடனே அவள் எண்ணெய்க் கிண்ணத்தை ஏந்தியபடி எதிரில் நின்றாள்.

அவன் பிறந்து இந் நாள்வரை இம்மாதிரி குளித்ததேயில்லை. பூப்போன்ற மெல்லிய கரங்களால் முகத்தில் எண்ணை வழியாமல், கண்களில் சிக்காய் படாமல், மயிர் சிடுக்கு விழாமல் தேய்த்ததை இன்பமுடன் ஏற்றுக் கொண்ட அவனுக்கு தினமும் எண்ணெய் தேய்த்தால் தேவலை போல்தோன்றியது.

அவன் நாற்காலியிலமர்ந்து முன்புறமிருக்கும் கண்ணாடியைப் பார்த்தான். அவள்முகம் முத்து முத்தாய் வேர்வைத் துளிகளுடன் தென்பட்டது. அவன் மௌனச்சாமியாய் உட்கார்ந்திருந்தான். அவள் தலையைச் சிடுக்கெடுத்தாள்........ அவள் உள்ளச் சிடுக்கு எடுபடும் நாள் என்றோ?

அதே சமயம் அத்தையிடம் யாரோ "அத்தை! உங்க அண்ணா பண்ணின

பூஜாபலன். உங்க, மன்னி செத்தாலும் தெய்வமா நின்னுதான் பச்சைக் கிளி யாட்டமா பொண்ணைப் பிள்ளைக்குப் பண்ணிவைத்தாள். அசடு அப்பா சாமிக்கு வந்த அதிருஷ்டத்தைப் பாருங்கோ. கனவில் கூட நினைச்சிருப் பேளா, இந்தமாதிரி சொர்ண விக்கிரக மாட்டமா பெண் வரும்னு?" என்று கேட்டாள்.

"அடி சாலா! ஆடைவாய்க்கறதும் ஆம்படையான் வாய்க்கறதும் அதிருஷ்டத்தைப் பொறுத்தது என்பார்கள். ஆம் படையாள் வாய்க்கறதுன்னு சொல்ல னும்டீ!" என்றாள் அத்தை. இவ் வார்த்தை அப்பாசாமியை என்னவோ செய்தது. உடலில் சிறிது நடுக்கம் கண்டது.

"சிடுக்கு எடுப்பது வலிக்கிறதா!" என்று அவன் தோள்மேல் முகத்தைச் சாய்த்துக் குனிந்து கேட்டாள். "ஊஹூம்" என்றான் வெளியில் சென்றிருந்த கிழவர் அச்சமயம் வந்து விட்டார். வாலத்தின் குரலைக் கேட்டு, அவள் தன் பிள்ளைக்கு என்ன சொல்லிக் கொடுக்கிறாளோ, என்று ஓசைப்படாமல் தாழ்வாரத்தில் நின்றார்.

"நான் ஒன்று சொல்கிறேன். தயவு செய்து கேட்கிறீர்களா?" என்றாள்.

"ஊம்" என்றான்.

"அப்பா வயதான காலத்தில் ஒண்டியாய் நிலபுலம் பார்த்துக் கொண்டு சுத்திவருகிறது, நீங்கள் திண்ணையில் உட்கார்ந்து சீட்டாடுகிறது,-இது நியாயமா? நாளையிலிருந்து அப்பாவுடன் போய் நீங்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு வர வேணும். அப்பொழுது தான் பண்ணையாட்களுக்கும் உங்களிடமும் பய பக்தி ஏற்படும். இல்லையேல் உங்களை எல்லோரும்-பெண்கள்கூட குறைத்துத் தான் பார்ப்பார்கள்."

அவன் வாயசைக்கவில்லை.

"என் மேல் கோபமா?" என்று பரிதாபமாய்க் கண்களில் நீர் தேங்கக் கேட்டாள். அவள் உள்ளத்துள் ஏதோ புயல் அடிக்கத் தொடங்கியது. அப்பரிதாபப் பார்வை அவனை இளக்கி விட்டது.

"ஆகட்டும்" என்றான்பரபரப்புடன். அந்தத் தளும்பும் கண்ணீர் அவனை அந்த வேலையில் துரிதப்படுத்தியது.

மறுநாள் காலை தந்தையும் மகனும் காப்பி குடித்துக் கொண்டிருக்கிறார்கள். தெருவில் அப்பாசாமியின் படைகள் சீட்டுக் கச்சேரிக்கு வந்து சேர்ந்து விட்டன.

"வீராயி! சின்னய்யரு வயலுக்குப் போகப்போகிறார், இன்று ஆட வர முடியாதாம். என்று அவர்களிடம் சொல்லு" என்னும் வாலத்தின் குரல் தெருவிலிருப்பவர்களுக்கும் அப்பாசாமிக்கும் கேட்டது. வீராயி போய்ச் சொன்னாள். அவர்களெல்லோரும் முகத்தில் அசடுவழியச் சென்றனர்.

அப்பாசாமி தன் தந்தையுடன் வயல் வெளிகளுக்குச் சென்று வந்தான். வந்ததும் அவன் அன்று பார்த்து வந்த நிலங்களைப் பற்றியும், அதில் என்னென்ன விளையும் என்பதைப் பற்றியும் கேட்டாள். அவனுக்குச் சொல்லத் தெரியவில்லை. பிறகு சொல்வதாய்ச் சொல்லிக் கட்டிலில் படுத்தான். அவள் முயற்சிக்கோலும் அப்படியே மனத் திரையில் வீழ்ந்து அவனை நோகச் செய்தது. அவள் கண்கள் அவனது உள்ள நோயை அறிவிக்கின்றனவோ என்னும்படி கலங்கின.

அவள் மனத்தில் தோன்றியது: அரசகுமாரிகளாயிருந்தும் எத்தனை பெண்கள் கணவர்களின் அசட்டுத்தனத்தைச் சகித்துக்கொண்டு புராணங்களில் இடம் பெற்றனர். கசடனை கவி காளிதாசனை அவர் மனைவிதானே அவ்வளவு பெரிய அறிவாளியாக்கினளாம். 'உடனே' அப்படி நாம் செய்தால் இவர் அவரைப்போல் நம்மைவிட்டு..........அதை நினைக்கும் போதே அவள் மனம் நிலைகுலைந்தது. சட்டென்று அவன் காலருகிலமர்ந்து, "அதிக தூரம் நடந்துவிட்டீர்களா? கால் கடுக்கிறதா?" என்றபடியே கால்களைப்

பிடித்தாள். மிருதுவான கரஸ்பரிசத்தால் தன் புறகோபை மறந்திடினும் அப்பா சாமியின் அகநோய் அகலவில்லை. "கெட்டகேடு, ஒரு பெண் அறிந்த மட்டில் நாம் அறியவில்லையே! எப்பாடு பட்டாயினும் சரி, தினமும் அப்பாவுடன் வயல்களுக்குச் செல்லவேண்டியதுதான்" என்று நிச்சயித்துக்கொண்டு கண்களை மூடினன். தூக்கமா வருகிறது?

அன்றுமாலை அவள் கேட்பதற்குப் பதில் சொல்வதற்காகவே தந்தைக்குமுன் வெளியில் செல்லத் தயாராய்க் காத்திருந்தான். அன்றிரவு வாலம் கேட்டதற்கெல்லாம் அப்பாசாமி பதில் சொன்னன். மெள்ள மெள்ளக் கணக்கு வழக்குகளைப் பார்க்கத் தொடங்கினன். வாலம் எதையும் தான் முன் செய்து அவனைத் தன்னை பின்பற்றும்படி செய்து சிறுகச்சிறுக அவன் தலைமேல் பொறுப்பை ஏற்றினள். இப்படி, இரண்டுங் கெட்டானன அப்பா சாமி ஒருவருடத்திற்குள் கெட்டிக் காரனுகி விட்டான்.

பசுபதி ஐயர் இரண்டொருமுறை நேரில் வந்து பெண்ணை யனுப்பும்படி கேட்டார். வாலம் பிறந்தகம் செல்ல மறுத்துவிட்டாள். அவள் சகோதரர்கள் வந்து அதி அன்பாய் அழைத்தனர். அதற்கும் அவள் இசையவில்லை. பிறந்த வீட்டுக்காரர்களைக் கண்டாலே அவள் மனத்தில் அணைந்த அக்கினி கொழுந்து விட்டு எரியும். தன் தந்தை தன்னை வேண்டுமென்றே தன் கௌரவத்தை நிலை நாட்டிக்கொள்ளக் கடன்கழித்தாற்போல் பெரிய குளத்தில் தெரிந்து தெரிந்து தானே இரண்டுங்கெட்டானன அப்பா சாமிக்கு அளித்தார்? மேலும் ஜனங்கள் தங்கள் ஊரில் சொல்வது, 'ஆனதுக்கொரு ஆகாதது. ஆகாததற்கொரு ஆனது. கடைசியில் தெய்வ யத்தனம்; அதே இங்கு அப்பாசாமியின் அதிருஷ்டம். அவன் அம்மா செய்த பூஜா பலன். எங்கிருந்தாலென்ன? வரைப்பிடித்தவர் அவர், பானை பிடித்தவள் நான்! அதிருஷ்டமோ துரதிருஷ்டமோ எங்களுடையதுதானே! இப்படி நிச்சிந்தையாய்ப் பிறந்தகத்தை மறந்து குடித்தனம் செய்தாள்.

வாலம் பெரியகுளம் வந்து மூன்றுண்டுகள் ஆகிவிட்டன. அவள் சாமார்த்தியத்தால் அப்பாசாமி புதிய மனிதனுகி விட்டான். கையில் வெற்றிலைப் பெட்டிக்குப் பதில் லேவாதேவிப் புஸ்தகம். திண்ணையில் சீட்டுக்கச்சேரிக்குப் பதில் வியாபாரிகளின் முற்றுகை. எங்கு கடன், எங்கு வலம், எங்கு கலியாணம் என்றாலும், எல்லாம் அப்பாசாமியின் பணத்தால் தான். சின்னசாமி ஐயர் முதல் பெரியகுள கிராம ஜனங்கள் அனைவரும் வாலத்தின் யோசனைப்படிதான் எதுவுமே செய்வார்கள்.

உலக மகாயுத்த முரசு உலகமெங்கும் முழங்கியது. கல்வியறிவுள்ளவர்களும், கல்வியற்றவர்களும் காக்கி உடைகள் அணிந்து. கவர்னமெண்டார் அளிக்கும் காய்ந்த ரொட்டிகளைத் தின்று, காசுதான் நமக்குக் குறிஎன்று யுத்த சேவையிலீடு பட்டனர். நிலங்களின் விலை ஏறிற்று. உணவுப்பொருள்-பஞ்சம் ஏற்பட்டது. அறிவுள்ள வாலம் உழவர்களை ஆதரித்துத் தங்கள் நிலத்தில் நன்கு பாடுபடச் செய்தாள். அதிருஷ்டம் பொங்கியது. பெரியகுளத்திற்குப் பெரிய பண்ணையாகி விட்டார் சின்னசாமி ஐயர்.

வீட்டில் வேலை அதிகமாகிவிட்டது. சின்னசாமி ஐயருக்கு முன்போல் ஓடியாடி உழைக்க முடியவில்லை. வாலம் தன் மாமா தாமோதரரைத் தன்னிடம் வந்து விடும்படி எழுதினள். அதன்படி அவரும் வந்துவிட்டார். அவள் தன் பொறுப்பை முழுதும் அவர்பால் ஒப்படைத்து வீட்டு வேலைகளில் சிரத்தை ஏற்றுள்.

பசுபதி ஐயருக்குத் தம் பெண் மேல் கூடக் கோபமில்லை. சின்னசாமி ஐயரின் மேலும் அப்பாசாமி மேலும் அளவுகடந்த கோபம். "அன்றே அவள் சொன்னள். பெரியகுளம்னுலே வயத்தைக் கலக்கிறது என்று. அது சரியாய்ப் போச்சு" என்று அடிக்கொரு முறை சொல்வார். பாரபரியாய்க் காதில் விழும் நற்செய்திகளைக்கேட்டு ஆனந்த

மடைவார். ஆனல் அவருக்குப் பெரிய குளம் போகப் புத்திதோன்ருது. பார்வதியம்மாள் மாத்திரம் அவ்வப்பொழுது அங்கலாய்த்துக்கொள்வாள். "எல்லாரையும்விடச் சமத்து. அவள் தலையில் அப்படி ரெண்டுங்கெட்டானுடன் வாழ எழுதியிருக்கு" என்று.

அன்று பசுபதி ஐயர் எங்கோ வெளியில் செல்லத் தயாராய் இருந்தார். மஞ்சளிட்ட கடிதாசு ஒன்று தபால்காரன் கொண்டுவந்து கொடுத்தான். அதில் வாலத்திற்குப் பிள்ளை பிறந்திருக்கிறதென்றும், நாமகரணத்திற்கு வர வேண்டுமென்றும் எழுதியிருந்தது. அந்தச் செய்தியை அறிந்த ஆனந்தத்தைவிட அப்பாசாமி வீட்டார்கள்மேல் கொந்தளித்த கோபம்தான் அதிகமாயிற்று. பசுபதி ஐயர் சாக்ஷாத் பசுபதியே ஆனர். பார்வதியம்மாள் என்ன சொல்லியும் அடங்கவில்லை. "எனக்கு வலாம் என்று ஒரு பெண் இல்லை என்று நினைத்துக்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டார். அவர் சொன்னல் சொன்னதுதான். கண்டிப்பான பேர்வழி. பார்வதியம்மாள் வாய் அடங்கிவிட்டது. பெற்ற மனம் குமுறிக்குன்றியது. நடைப்பிணம் போல் சுற்றிவந்தாள்.

நாட்கள் நகர்ந்தன. பசுபதி ஐயர் பலவிதத்திலும் நொந்துவிட்டார். சினமும் சீற்றமும் மாத்திரம் குறையவில்லை, அதிகமாய் வளர்ந்திருந்தது. பல்லும் உதிர்ந்து, சொல்லும் குறைந்து பார்வதியம்மாள் பலவகையில் வேதனைப் பட்டுகொண்டிருந்தாள்.

* * * *

தெருவாயிலில் கார் ஒன்று கனவேகமாய் வந்து நின்றது. அதிலிருந்து கம்பீரமான முப்பது வயது ஆடவன் நான்கு வயதுச் சிறுவனைக் கையில் பிடித்துக்கொண்டு இறங்கினன். அவன் பின் தாமோதரன் இறங்கினர். பசுபதி ஐயருக்கு வருபவர் யார் என்று தெரியவில்லை. கண்கள் மலினமாகிவிட்டன. வந்தவன், "மாமா"! என்று கூப்பிட்டு பிரகாச்! தாத்தாவுக்கு நமஸ்காரம் செய்டா!" என்று தானும் நமஸ்கரித்

அடுத்த விளையாட்டு பந்தயத்தில்

அம்ருதா
ரத்த சுத்தி
திராவகம்..

கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.
நரம்புகளை முறுக்கேற்றுகிறது

கேசரி குடீரம் லிட், மதராஸ்

ஒரிஸ்ஸா நிஜாம் ஆந்திரா ஜில்லாக்கள்
தமிழ் நாட்டிற்கு ஏஜண்டுகள்
ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
பெர்ஹாம்பூர் — செகந்திராபாத்
பெஜவாடா — மதுரை

தான். அவர்மலைத்துப் பார்த்தார். அதற்குள் தாமோதரன், "அத்திம்பேர்! வாலத்தின் அகமுடையான் வந்திருக்கிறார். உங்கள் பேரன் பிரகாசுக்கு அக்ஷராப்பியாசம். அதற்கு நேராகவே பாட்டியையும் தாத்தாவையும் அழைத்துப் போக வந்திருக்கிறான் குழந்தை" என்றார்.

குழந்தையின் குறுகுறுத்த முகத்தையும், மாப்பிள்ளையின் லக்ஷ்மீகரமான முகத்தையும்-ஆம், இன்று அம்முகத்தில் முன்பிருந்த அசட்டுப் பார்வையில்லையே! லக்ஷ்மியும் சரஸ்வதியும் தான் போட்டி போட்டுக்கொண்டு மாறிமாறிப் பிரகாசிக்கின்றனரே!—கண்டு, கனல்வீசி எரியும் அவர் கடுஞ்சினம் ஆறிய மாயம்தான் என்ன அதிசயம்.

பார்வதியின் காதில் தாமோதரனின் சொற்கள் விழவே, தள்ளாடிய நடையை வேகமாக்கி முன்வந்து குழந்தையை எடுத்து முத்தமிட்டு, "அப்பா! மாமியாரில்லாத புக்ககம்தான் கிடைத்தது. தாயிருந்தும்என்குழந்தைதாயில்லாதவள் போல் தாங்குவாரற்று நின்றாள்" என்று கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

* * * *

பெரியகுளத்தில் சின்னசாமி ஐயரால் ஏற்படுத்தப்பட்ட இலவசப் பள்ளிக்கூடத்தை இன்று மதுரை ஜில்லாக் கலெக்டர் திறந்துவைத்தார். அவர் பேரன் பிரகாசனுக்கு இன்று அக்ஷராப்பியாசம். அநேக ஏழை எளியவர்களுக்கு உடைகள் அளிக்கப்பட்டன. எங்கு கண்டாலும் அப்பாசாமியின் புகழ் பத்திரிகைகளில் பத்தி பத்தியாய் வெளியாயிருந்தது.

தெருவாயிலில் கார் நிற்கிறது. எல்லோரும் ஏறிவிட்டனர். வாலம் இடதுகையைத் திண்ணையில் ஊன்றிக்கொண்டு வலதுகையில் பிரகாசனைப் பிடித்துக்கொண்டு நிற்கிறாள். காரினுள் ஒரு காலை வைத்து மற்றொரு காலை வைக்காமலே மகளைத் திரும்பிப்பார்த்துப் பசுபதி ஐயர் "வாலம்! ஊருக்கு வந்துவிட்டுப் போம்மா! எட்டு வருஷமா

BOOKS

BY

K. S. VENKATARAMANI

	Rs.	A.
My Ashram Plan for Rural uplift (Just Published)	...1	8
Kandan, The Patriot (A Novel of New India in the Making) Second Edition	3	0
On the Sand-Dunes (Musings of Life in free Verse) Second Edition	1	0
The Indian Village (A Ten year Plan) Second Edition	0	12

SVETARANYA ASHRAMA

MYLAPORE :: :: MADRAS

விஞ்ஞானம்

'என்னைத் தள்ளியது யார்?'

பெ. நா. அப்புஸ்வாமி

ஸ்காட்லாந்து தேசத்தில் டம்பார்டன் என்னும் மாகாணத்தில், கடற்கரை ஓரத்தில் ஹெலன்ஸ்பரோ என்னும் சிற்றூர் ஒன்று இருக்கிறது. அங்கே ஒருநாள் இரவில் வானத்தில் மேகம் கவிந்து, எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. காற்றும் பலமாக வீசி, கிட்டத்தட்டப் புயலைப் போலவே அடித்துக்கொண் டிருந்தது. குளிரோ கேட்கவேண்டியதில்லை. இதற்கிடையில் மழையும் பெய்யத் தொடங்கியது.

அந்த இருட்டு வேளையில், வீட்டை நோக்கி ஒரு வாடகைக் கோச்சு வண்டி கூடுமளவில் விரைவாகச் சென்றுகொண்டிருந்தது. நடப்பதே கஷ்டமாயிருந்த அந்தச் சமயத்தில் அந்த வண்டி விரைந்து சென்றதற்குக் காரணம் என்ன? எப்படியாவது வீடு போய்ச் சேர்ந்துவிட்டால் போதும்; எவ்வளவு சீக்கிரம் நாம் வீடு செல்லுகிறோமோ அவ்வளவும் நல்லது; அதிக நேரம் இந்தக் கஷ்டத்துக்கு உள்ளாக வேண்டியதில்லை என்ற எண்ணத்தால்தான் அவ் வண்டி விரைந்து சென்றது.

கோச்சுவண்டியை ஓட்டிய வண்டிக்காரன் தன் மேற்சட்டையை இழுத்துப் போர்த்துக்கொண்டும், தொப்பியைத் தலையில் அழுத்திக்கொண்டும், தலையைக் குனிந்துகொண்டும், இருட்டில் பயன்படாக் கண்களை இறுக மூடிக்கொண்டும், குதிரை தன் இஷ்டம்போல் போகட்டும் என்று விட்டுவிட்டான். அப்பொழுது அவன் கழுத்தில் ஏதோ ஒன்று மோதிற்று. அது காற்றில் விழுந்த மரக்கிளையாயிருக்கலாம் என்று நினைத்தான். அவன் நினைத்து முடிவதற்குள் அவன் வண்டியிலிருந்து சுண்டி இழுக்கப்பட்டு, தடாரென்று பாதையில் விழுந்தான். விழும்போது, யாரோ தன்னை இழுத்துத் தள்ளிவிட்டதாகக் கூச்சல்போட்டான்.

அவன் குரலைக் கேட்டுக் குதிரை சட்டென்று நின்றுவிட்டது. அந்தக் கூச்சலில் அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்களும் வீட்டைவிட்டு வெளியே ஓடிவந்து பார்த்தார்கள். 'யாரோ என்னைக் கழுத்தைப் பிடித்து இழுத்துத் தள்ளிவிட்டார்கள்' என்றான் வண்டிக்காரன். ஆனால், அங்கே வேறு ஒருவரையும் காணவில்லை. அவனுக்கு உதவிசெய்ய வந்தவர்கள் விளக்கைக் கொண்டு தேடிப் பார்த்தபோது, தெருவுக்குக் குறுக்கே ஒரு கம்பி தொங்கி, காற்றில் ஆடிக்கொண்டிருக்கக் கண்டார்கள்.

அவர்களில் ஒருவன், அந்த வண்டிக்காரனைப் பார்த்து, 'உன்னை ஆள் ஒருவரும் இழுத்துத் தள்ளவில்லை. உன்னைத் தள்ளியது இந்தக் கம்பிதான். நீ தலையைக் குனிந்துகொண்டு போனபோது உன் கழுத்தில் இது மாட்டிக்கொண்டிருக்க வேண்டும். நீ அதைக் கவனியாமல், வண்டியை ஓட்டவே, கம்பி உன்னை இழுத்துத் தள்ளியிருக்க வேண்டும்' என்றான்.

'நல்ல வேளை, இவன் இவ்வளவோடு தப்பினானே! அப்படியே அந்தக் கம்பியில் சுருக்கு விழுந்திருந்தால், இவன் பாடு என்ன ஆகியிருக்கும்? தூக்கிவிட்டவனைப் போல் இவன் உயிர் போயி

யிடுத்தே!" என்றார். "அப்பா! அவருக்குச் சமத்துப்போராதுன்னு உங்களுக்கே தெரியும். நான் எங்கு வருவது?" என்றாள் வைராக்கியத்துடன்.

ருக்குமே! இவன் பிழைத்தது மறு பிழைப்பு!' என்றாள் ஒரு கிழவி.

'கீழே விழுந்ததில் காயம் ஒன்றும் படவில்லையே?' என்று பரிவுடன் கேட்டாள் மற்றொருத்தி.

'நம்முடைய ஊருக்கு இந்த டெலிபோன், கிலிபோன் ஒன்றும் வேண்டாம் என்று நான் அப்பொழுதே சொல்லவில்லையா?' என்றான் ஒரு கிழவன்.

'ஓகோ! இது புது டெலிபோன் கம்பெனியின் காரியமா? அவர்களிடம் நஷ்டம் வாங்கிவிட்டால் போகிறது' என்றான் மற்றொருவன்.

இவ்விதமாகப் பலர் பேசிக்கொண்டு, அந்த வண்டிக்காரனுக்கு ஆறுதல் சொல்லி, அவனை மீண்டும் வண்டியிலேற்றி, வீட்டுக்கு அனுப்பினார்கள்.

மறுநாள் காலையில் அந்த வண்டிக்காரன் டெலிபோன் கம்பெனிக்குச் சென்று, தனக்கு நேர்ந்த விபத்தை ஆதியோடந்தமாகக் கூறினான். 'உங்களுடைய அஜாக்கிரதையால் இன்னும் பெரிய விபத்து நேர்ந்திருக்கக் கூடும். அப்படி நேராதது என் அதிர்ஷ்டம்' என்று சொல்லி, அவர்கள் மீது பலமாகப் பழிசுமத்திக் கடிந்து பேசினான்.

அவர்கள் அவனுடைய விருத்தாந்தத்தைக் கேட்டு, எல்லாவற்றையும் தெரிந்துகொண்டார்கள். 'நாங்கள் அந்தத் தெருவில் இன்னும் டெலிபோன் கம்பிகளைப் போடவில்லையே. எங்களுக்குப் போட்டியாக வேறு யாராவது வந்துவிட்டார்களா? பார்ப்போம்' என்று அங்கே வந்து பார்த்தார்கள்.

அந்தக் கம்பி எங்கிருந்து வருகிறது என்பதைக் கவனித்தபோது, ஒரு சிறு வீட்டில் ஒரு சிறு பையனுடைய அறையிலிருந்து புறப்படுவதைக் கண்டார்கள். அது அங்கிருந்து அவனுடைய சிநேகிதர்கள் நாலைந்துபேர் வீடுகளுக்குச் சென்றதும் தெரியவந்தது. அச்சிறுவனுடைய அறையில் ஒரு டெலிபோன் இருந்தது. அவனுடைய சிநேகிதர்கள் அறைகளிலும் டெலிபோன்கள் இருந்தன. அச்சிறுவன் தன் சிநேகிதர்களோடு பேசுவதற்காகச் செய்துகொண்ட சொந்த ஏற்பாடு அது. அவர்கள் உபயோகித்த டெலிபோன் கருவிகள் அவன் தானாகவே செய்தவை.

அச் சிறுவன் அவ்வூர்ப் பள்ளிக்கூடத்தில் படித்துவந்த சிறு மாணவன். அவ்வூரிலுள்ள மதக்கோயிலில் போதகராயிருந்த பேர்ட் என்பவரின் மகன். 'குற்றவாளி'யைக் கண்டுபிடித்த டெலிபோன் கம்பெனியார் அச்சிறுவன் கட்டியிருந்த டெலிபோன் கம்பிகளையெல்லாம் எடுத்துவிட்டார்கள். இனிமேல் இவ்வாறு செய்யலாகாது என்று அவனை எச்சரித்தார்கள். உண்மையில் அச்சிறுவனுடைய திறமையைக் கண்டு அவர்கள் வியந்தார்கள்.

இவ்வாறு இளம்பிராயத்திலேயே அவன் மனத்தில் தொடங்கிய ஆராய்ச்சிக் குறுகுறுப்பை அந்தக் கம்பெனியின் தடை-உத்தரவுகள் முற்றிலும் தடுக்கவில்லை. மனத்தில் கிளர்ந்து எழும் உணர்ச்சிவேகம் தூண்டுவதால் ஒருவன் செய்யும் காரியங்களை யாரால்தான் தடுக்கமுடியும்?

அதன்பிறகு, அச்சிறுவன் ஒரு பழைய 'ஓட்டை' மோட்டார்க்காரைச் சொற்ப விலைக்கு வாங்கினான். அதைப் பிரித்தும், சேர்த்தும், பழகிவந்தான். சில ஆராய்ச்சிகளையும் அதன் துணையால் நடத்தினான். இதனால், அச்சிறுவனுக்கு எந்திர சாஸ்திரத்திலும் ஆவல் உண்டாயிற்று. ஆகையால், அவன் அரசாங்கத் தொழிற் கலாசாலையிலும், கிளாஸ்கோ சர்வகலாசாலையிலும் சேர்ந்து படித்துவந்தான்.

பின்பு, மோட்டார் வேலை செய்யும் ஒரு தொழிற்சாலையிலே கற்றுக்குட்டியாக வேலைக்கு அமர்ந்தான். அங்கே அதிகாலையில் ஐந்தரை மணிக்கு வேலை தொடங்கும். ஒவ்வொரு நாளும் மூடவேண்டும் என்று குறித்த நேரத்துக்கு அதிகப்படியாகவே வேலை நடக்கும். ஆதலால் நாள்தோறும் அவன் விடியுமுன் வீட்டைவிட்டு வேலைக்குப் போவான். வேலை முடிந்து அவன் வீடு திரும்பும்போது இரவில் வெகு நேரம் ஆகிவிடும்.

இவ்வாறு, இளம்பிராயத்திலேயே அவனுக்கு நெடுநேரம் தொடர்ந்து வேலை செய்வது வழக்கமாகிவிட்டது. ஏற்கெனவே துர்ப்பலமாயிருந்த அவனுடைய உடல் இதனால் இன்னும் பலவீனமாயிற்று. ஆயினும் அவனுக்கு ஆராய்ச்சியிலிருந்த ஆவல் மட்டும் சிறிதும் குறையவே இல்லை.

வயிற்றுப் பிழைப்புக்காக அவன் பல தொழில்களில் அமர்ந்து, அற்ப சொற்பம் ஏதோ சம்பாதித்து வந்தான். இடையிடையே பல புதிய பொருள்களை இயற்றியும் வந்தான். கடைசியாக, இளம் பிராயத்தில் மனத்தைப் பற்றிக்கொண்ட விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் மீண்டும் இறங்கினான். அத் துறையில் உலகம் அதிசயிக்கும்படியான விந்தை ஒன்றைச் சிருஷ்டித்தான். அதுதான் 'டெலிவிஷன்' என்னும் 'அயலிடக் காட்சி'. அதாவது, கண்ணுக்கு எட்டாத அயல் இடத்தில் நடக்கும் காட்சிகளை நம் கண்முன்னே தோன்றச் செய்யும் கருவி. ஓரிடத்தில் இயற்றப்படும் ஒலியை எவ்வாறு ரேடியோ மற்றோர் இடத்தில் கேட்கச் செய்கிறதோ, அவ்வாறே ஓரிடத்தில் நிகழும் காட்சியை மற்றோர் இடத்தில் இது தோன்றச் செய்கிறது.

சிறு வயதிலேயே விஞ்ஞானத்தில் கருத்துக்கொண்டு, வயது வந்ததும் அதை நிறைவேற்றி வைத்த அந்தச் சிறுவன் யார் தெரியுமா? அவன்தான் ஜான் லோகி பேர்ட்.

வந்தே மாதரம்! தேவி மீனும்பிகை துணை ஜெய் ஹிந்த்!!

எமது சபை தோன்றி 15 வருடங்களுக்குப் பிறகு, மதுரைமாநகரில்
எமது மகத்தான ஆரம்ப விழா!
14-9-47 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30க்கு, திருப்புகழ்மணி - ஸ்ரீ. T. M. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருகிறது.

35 வருடமாக நாடகம் மூலம் நற்பணியாற்றிவரும்
நாடகக் கலாநிதி, நாடகக் கலையரசு, நாடகக் கேசரி,
சுதந்தர நாடகமணி, நவாப் - T. S. ராஜமாணிக்கத்தின்
மதுரை தேவி பால வினோத சங்கீத சபையார்
மதுரை செல்லம் தியேட்டரில்

ஸ்ரீ முருகன் திரு அவதாரமாகிய

குமார விஜயம்

எனும் புதிய புண்ய நாடகத்தை பிரதி தினமும் நடத்திவருகிறார்கள்.
'இந்திய சுதந்திரோதய சீன்' என்றென்றும்
உங்கள் மனதைவிட்டு அகலாதிருக்கும்!

டிக்கட் வரியுள்பட: 5-0-0 4-0-0 2-12-0 1-8-0 0-12-0

நவாப் - T. S. ராஜமாணிக்கம், உரிமையாளர்

ராமாயண அரசியல்

(எஸ். அம்புஜம்மாள்)

2—ராமனுடைய ராஜநீதி

‘ராமன் தர்மஸ்வரூபி’! அதாவது ‘அறம் காக்கப் பிறந்தவன்’ என, மகரிஷிகளாலும், தேச மக்களாலும், என் ராம விரோதிகளாலேயும் கூட ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம்தான். தனக்கு அறத்தினிடம் உள்ள பிரியத்தை ராமனே, வனவாசம் முதலிய இடங்களில் அடிக்கடிக்குறிப்பிட்டு இருக்கிறான். ‘தான் அறம் காப்பவன்’ என்று உலகம் அறியும் விதம் ராமன் நடத்திக் காட்டினான் என்றால் அதில் என்ன ஆச்சரியம்? ஆதலால் இந்த விஷயத்தை விட்டு விட்டு, ராமனுடைய நீதியில் முழுமையும் அறத்திற்குத்தான் பிரதானமளிக்கப்பட்டுள்ளதா அன்றி அரசியல் ஞானத்திற்கும் அதில் இடமுண்டா என்பதைத்தான் ஆராய வேணும்.

முதலில் இந்தக் கேள்வியை கேட்டுப் பார்ப்போம். ராமன் தன் சரிதையின் மூலம் கேவலம் ஒரு சனாதன தர்மத்தை மட்டும் தான் உலகத்தாருக்கு உபதேசித்துள்ளானா? அன்றி அத்துடன் ஒத்தார்ப்போல அரசியல் துறையில் சிறந்தோங்கி விளங்கக்கூடிய ராஜதந்திரத்தையும் நடத்திக் காட்டினானா?

உண்மையில், ராமனுடைய ஜீவிய சரித்திரத்தில் அரசியல் நோக்கத்திற்கும், அது சம்பந்தமான ஆலோசனைகளுக்கும், சூழ்ச்சிகளுக்கும் சற்றும் இடமில்லை என்றால் ராமனை ‘அறம் வளர்ப்பவன்’ ‘ஒரு சிறந்த முனிவன்,’ என்றெல்லாம் வர்ணிக்கலாமேயன்றி, பண்டை நாட்களில் பாரத தேசத்தை வெகு அழகாக ஆட்சிபுரிந்த, ஒரு சிறந்தவேந்தன், ‘ராஜாதிராஜன்’ என்றெல்லாம் கூறுவது சற்றும் பொருந்தாது.

‘ராஜ குடும்பத்தில் “யார் அடைவது அரசுரிமையை?” என்பதைப் பற்றி இரகசிய கக்ஷி வாதம் இரண்டு இருந்து வந்தது நெடுநாளாக’ என்ற விஷயம் முன்பே கூறப்பட்டது. ராமன் அதை நன்கு அறிவான். அதில் சம்பந்தப் பட்டவர்களின் சூழ்ச்சிகளையும் அறிந்துதான் இருந்தான். அவன் சூழ்ச்சிகளின் பயனாக தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தடுத்துக்கொள்ளவும் சித்தமாகவே இருந்தான்.

கைகேயியின் விவாகத்தின்போது தந்தை கேகயனுக்கு அளித்த வாக்குறுதியை ராமன் அறிவான். ராமன் தானாகவே சித்திரகூடத்தில் பரதனுக்கு இதைச் சொல்லியிராவிட்டால், உலகம் அதை அறிந்திருக்க முடியாது. இராமாயணத்திலே வேறு எந்த இடத்திலும் இதைப்பற்றி எவரும் பிரஸ்தாபித்ததாகக் காணப்படவில்லை. தேவாசுர யுத்தத்தின்போது கொடுத்த இரண்டு வரங்கள் மட்டுமே, இராமன் வனவாசத்திற்கும், பரதன் பட்டம் ஏற்பதற்கும் காரணம் என்று அதுவரை எல்லோரும் (அயோத்தி மக்கள்) எண்ணி இருந்தார்கள். இராமன் தந்தையின் பழைய வாக்குறுதியையும் அறிவான், பரதனை அயோதினின்றும் விலக்கிவிட்டு அவனில்லாத சமயம் பார்த்து ராமனுக்கு முடிசூட்ட வேண்டி செய்த சூழ்ச்சியையும் அறிவான்.

அப்படியானால், அடிக்கொருதரம், அறத்தின் பெயரைச்சொல்லிக்கொண்டிருந்த ராமன், இந்த சூழ்ச்சியை ஏன் நிராகரிக்கவில்லை? என்று கேட்கலாம் அல்லவா? அவன் தந்தையைப் பார்த்து “பரதனுக்கு முடிசூட்டுவதாக ஏற்கனவே தாம் கேகயனுக்கு வாக்களித்தி

ருக்கிறீர். ஆதலால், நியாயப்படி அரசுரிமை அவனுக்கே கிடைக்க வேண்டும். எனக்கல்ல " என்று ஏன் கூறவில்லை ?

'சித்திரக் கூடத்தில் ராமன் கூறியது பிசகு. கேகயனுக்கு யாதொரு வாக்கும் அளிக்கவில்லை. தயரதன்' என்றால் 'பரதன் திரும்பி வருவதற்குள் நீ யுவராஜ பட்டாபிஷேகம் செய்து கொண்டவனாகக் கடவாய்' என்று மன்னன் மைந்தனைப் பார்த்து சொல்லியதின் நோக்கம் தான் என்ன ? மேலும் குலவழக்கப்படி, மூத்த மகனுக்கே, அரசுரிமை சேர வேண்டியிருக்க, சேடி மந்தரைக்கு, அவ்வளவு வயிற்றெறிச்சல், பரதனுக்குத்தான் பட்டம் சூட்ட வேண்டும் என்ற அந்த ஆத்திரம், உண்டாக நியாயந்தான் என்ன ?

ராமன் தந்தை சொற்படி நடப்பவன். 'குலப்பெரியோர்களும் இடும் கட்டளையின் குணதோஷங்களை விசாரிக்கலாகாது' என்ற முறைப்படி நடப்பவன். ஒரு சமயம் ராமன் கைகேயினிடம் 'அரசன் ஆணையிட்டால் நான் நெருப்பிலும் குதிப்பேன்' என்று வெளியிட்டிருக்கிறான். ஆதலால், தந்தை 'பட்டம் சூட்டிக்கொள்' என்றபோது யாதும் தடைகூறாது இருந்து விட்டான்.

ஆனால் ராமனை 'கண்மூடித் தனமாக தந்தையின் ஆணையே மந்திரம்' என்று நடப்பவன் என்று சொல்லலாமா? இல்லை! ஏனென்றால் தந்தை; " ராம! நான் கைகேயிக்கு அளித்த வரங்களினால் கட்டுண்டிருக்கிறேன். நீ இப்போது என்னைச் சிறையிலிட்டு, அரசுரிமையைக் கைப்பற்று " என்று சொன்னபோது அதைக் கேட்கவில்லையே ? இன்னும், ராமன் காட்டிற்குப் புறப்பட்டபோது, தசரதன் தாங்கொண்ணாத்துக்கத்துடன், நாக்குழற, " மகனே! இந்த ஓர் இரவு மட்டும் இருந்து விட்டு, நாளை போவாய்! ராமா! ஒருநாள் முழுதுமாவது உன்னைப் பார்த்துக் கொண்டு நான் பிழைத்திருக்கட்டும்!" என்று இரஞ்சிக் கேட்டுக்கொண்ட போனதும், ராமன் ஓரிரவு தங்கவும் மனமிசையாமல், தம்பியுடனும் சீதையுடனும் புறப்பட்டு அப்போதே காட்டிற்குப்போனான். ராமன் கண்மூடித்தனமாக தந்தை வாக்குக்குக் கீழ்படிகிறவன் அல்ல என்று இதனால் விளங்கவில்லையா ?

ராமன் தர்மபரிபாலனம் செய்தது மட்டுமின்றி, நுண்ணிய நோக்கத்துடன் அரசியல் பிரசினைகளையும் கவனித்து வந்தான் என்பதற்கு, அவன் அது சமயம் மன்னனுக்கு மொழிந்த உரைகளே போதிய சான்றாகும். அவன் சொன்னதாவது : 'இன்று நான் போவதால் எனக்குக்கிடைக்கக்கூடிய நற்கீர்த்தியை, நாளை போவதால் பெறமுடியுமா? ஆகையால் இன்றே போகிறேன்' என்றான்.

ராமன் அன்றையதினமே புறப்பட்டுப் போவதினால் கிடைக்கும் நற்கீர்த்தி தான் எது ? என்று ஆராய்வதற்கு முன் அன்றைய அரசியல் நிலையை கவனிப்பது அவசியம்.

சனாதன தர்மத்தின் முறைப்படி மூத்த மகன் என்ற ஹோதாவில், ராமனுக்கே அரசு உரியது. ஆனால் தந்தையோ, ராமன் பிறப்பதற்கு முன்பே அவன் பிறப்புரிமையைப் பிடுங்கி மற்றவனுக்கு அளித்து விட்டான். தந்தை விருப்பத்தின்படி அவரைச் சிறைப்படுத்தி அரசுரிமையைக்கைப்பற்றுவதாயின் தந்தையின் பிரதிக்ஞை முறித்ததாகும். 'பரதனே அரசாளட்டும்' என்று விட்டு விடுவதனால், 'தந்தை வாக்குப் பிறழாத மகன்' என்று ஒருபுறம் மக்கள் போற்றினாலும், அரசியல் நிபுணர்களும் மற்ற மகிபாலரும், 'பிறப்புரிமையை விட்டுக் கொடுத்த பயங்காளி' என்று ராமனை ஏசிக் காட்டுவது நிச்சயம். க்ஷத்திரிய குல மக்களின் முதற்கடமை பிரஜைகளை இன்புறப் பரிபாலிப்பது. ஆகையால் ராமனுக்கு அரசுரிமையை ஏற்பதும் விடுவதும் தன் சொந்த சுகத்தை மட்டும் பாதிக்கும் விஷயமன்று. ஒரு பெரிய ராஜ்யத்தைச் சார்ந்த கோடிக்கணக்கான மக்களின் சுக துக்கங்களைப் பாதிப்பதாகும். ஆகையால் அரச குலத்திலுதித்தவன், தீர ஆலோசியாமல் ஒரு காரியத்தையும் செய்வதற்கில்லை. ராமன் மனக்கண்முன், 'அரசுரிமையை விடு

வதா? ஏற்பதா? என்ற பிரசினை எழுந்தபோது அவன் பெரிய தர்ம சங்கடத்திற்காளானன்.

ஒருவன் அரசுரிமையைப் பெறுவதற்கு முற்கால முறைப்படி, ராஜா,பிரஜா, இருவரின் சம்மதமும் அவசியமாகிறது. எனவே, ராஜா, பிரஜா, இருவரையுமே தனக்கு அனுகூலமாக்கிக் கொள்வது, இரு பக்ஷத்தாருடையவும் பிரீதியை சம்பாதிப்பது, இருவருடையவும் பூரண விஸ்வாசத்தைப் பெறுவது, இவை இராமனுடைய அரசியல் கடமைகளாகி விட்டன. அவ்வாறே ராமன் தன் கடமைகளை நன்குணர்ந்து அவைகளை நிறைவேற்றிவந்தான். அதில் வெற்றியும் கண்டான் எனக் கூறவேண்டியதில்லை.

இந்த வெற்றிக்கு அவனுடைய தர்ம நிஷ்டை காரணமோ, உயர்தர ராஜ தந்திரம்தான் காரணமோ, அல்லது அவன் ஓர் அவதார புருஷன் என்ற உண்மை தான் காரணமோ எது எப்படி இருந்தாலுமென்? அரசனுடைய புத்திர வாஞ்சை, பிரஜைகளின் அபார ராஜபக்தி, இவைகளை அவன் முற்றிலும் பெற்று விட்டான். இன்றேல் ராமன் காட்டிற்குச் செல்லவே, அரசன் புத்திர சோகத்தினுல் உயிர் துறக்கவும், மக்கள் வீடு வாசல்களை துறந்துக் காடு செல்லவும் ஏன் நேர்ந்திருக்கப் போகிறது?

அரசனுடையவும், பிரஜைகளுடையவும் பிரீதியை ராமன் அறிவான். அத்துடன் கிழ அரசன் காதலி கைகேயின் வார்த்தைக்கு மாறுகூற மாட்டாதவன் என்பதையும் அறிவான், எனவே, ராமன் கைகேயின் பிரியத்தையும் சம்பாதித்துக்கொண்டான். பரதனைத் தன்னுடைய அனன்ய பக்தனுகவும் கொண்டான்.

நிற்க, தசரதன் கேகயனுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற ராமன் ஏன் முற்படவில்லை? ராமன் முடி சூட்டிக் கொள்ள ஏன் இசைந்தான்? என்ற கேள்விக்கு, பின்வரும் சமாதானம் கூறத் தகும்.

அரசன் கொடுத்த வாக்கு அறநெறிக்கு முரணனது. குலதர்மத்தின் முறைப்படி மூத்த மகனின் பிறப்புரிமையை அபகரிப்பதாகும். மேலும் மன்னன் காமத்துக்கு வசப்பட்டு அளித்த வாக்காகையால் காப்பாற்றத் தக்கது மன்று தர்மசாஸ்திரப்படி. பின்னும் கேகய மன்னன், கிழவனின் காமாவஸ்தையை உணர்ந்து, தன் சுய நலத்திற்காக அதை உபயோகப்படுத்திப் பெற்ற வாக்குறுதியாகையால், முறை தவறிப் பெற்றதெனத்தள்ளவும் தகும்.

இப்படி இருக்க, ராமனுடைய அரசியல் ஞானம் வீணனது' அவன் தன் பிறப்புரிமையைக் காப்பாற்ற முடியாமல் போனது, அவை ஏன்?

ராமன் கேவலம் ராஜதந்திரத்தையே கையாண்டு வரக்கூடியவன் அல்ல. தர்மபரிபாலனம் செய்யவே பிறந்தவன். தன்னுடைய நிகரற்ற சில சௌந்தர்யங்களினுலே, உலகத்தாரின் மனதை கொள்ளை கொள்வதற்கு மட்டுமின்றி, காட்டிலே ஓர் உயர்தரமான அரசியல் முறையையும், பிரஜைகளிடையே நல்லொழுக்கத்தையும் நிலை நாட்டவும் பிறந்தான். அதனுலேயே, மந்திரையின் கொடிய சூழ்ச்சியின் முன்பு, இவனுடைய அறநெறி பிழருத ராஜதந்திரம் நிற்க முடியாது போய்விட்டது. ஆயினும், 'தர்மமே வெல்லும்' என்ற நீதிப்படி மந்திரைக்கு கிடைத்த வெற்றி, வெகுகாலம் நீடித்திருக்கவில்லை. பிரஜைகள் ராமனையே தமக்கு அரசனுக வேண்டுமென்று விரும்பினுர்கள். ராஜா-பிரஜா இருவரும் மனமொத்து அளிக்க வேண்டிய ராஜ்ய பாரத்தை கட்டாயத்தின் பேரில் ஒருவன் வலியவந்து கைப்பற்றுவதை மகாஜனம் பொறுத்திருக்குமா? காட்டிற்கு சென்ற காட்சி, மகாஜனங்களுடையவும் பரதனுடையவும் மனதையும், இவ்வளவு தூர கருணை ரஸத்தினுல் கசிந்துருகும்படி செய்திருக்குமா?

'சக்கிரவர்த்தி திருமகன் ராமன் ஏழையாய், எல்லாம் துறந்து, மரஉரி உடுத்தி ஜடைதரித்து, பாதசாரியாய்

காட்டிற்குச் சென்றான் என்ற செய்தியைக் கேட்டவளவில் பரதன் மூர்ச்சை போட்டு விழுந்தானும்.

'கங்கைக்கரையிலே உலர்ந்த சிறகுகளைக் கொண்டு படுக்கை அமைத்து, அதன்மீது சக்கரவர்த்தி திருமகன் ராமனும், ஜனகன் செல்வி சீதையும், துயில் கொண்டனர்,' கங்கையின் தெள்ளிய நீரையே பருகி அன்றிரவு கடத்தினர்! என்பதை அறிந்து பரதன் மட்டுமின்றி, முற்றும் துறந்த முனிவர்முதல் வேடுவத் தலைவன் குகன் வரையிலும் ஒரே சோக ரஸத்தில் ஆழ்ந்து போயினர் அன்றோ?

மேலும் சீதை கூட வனம் சென்றது எப்படிப்பட்டது?

முதலில் ராமன் சீதையைத் தன்னுடன் காட்டிற்கு வரவேண்டாமென்று எவ்வளவோசொல்லிப்பார்த்தான். ஆனால் சீதை ஒரே பிடிவாதமாக இருப்பதைப் பார்த்து, "உன்னையும் கூட அழைத்துப் போவதுதான் என் உத்தேசம். ஆயினும் உன் உள்ளக்கிடக்கையைத் தெரிந்துகொள்ளாமல் நிச்சயம் எவ்வாறு செய்வது?" என்றான்.

ராமன் ஏன் சீதையை உடன் அழைத்துச் செல்ல உத்தேசித்தான்? பிரம்மச்சாரி விரதம் பூண்டு, தபஸ்விகளைப் போல வனத்திலே வாழச் சென்ற ராமன், காய் கிழங்குகளையே உண்டு ஜீவிக்க வேண்டிய, சுக சௌகரியங்களற்ற, கொடிய வனவாசத்திற்கு, சுகுமாரி சீதையை உடன் அழைத்துச் செல்லுதலில் பிரயோஜனம் என்ன?

ஆம்! கொடிய வனவாசத்திலே உயிர்க் காதலி அருகிலிருப்பது எவ்வளவோ ஆறுதலை அவசியம் அளிக்கத்தான் செய்யும் ராமனுக்கு. ஆனால் ராமன் சுயநலக் காரனா? தன் சொந்த சௌகரியத்திற்காக ஜனகன் மகள் சுகுமாரி சீதையைக் காட்டுக்கு இட்டுச் செல்ல எண்ணமா? இல்லை! அரசியல் ஞானம் படைத்தோர் இதை ஒப்புக் கொள்ள முடியாது.

சீதையை அழைத்துச் செல்ல விரும்பியவன் கௌசல்யையை மட்டும் ஏன் வனம் கூட்டிச் செல்ல விரும்பவில்லை? கௌசலை கூட வர எவ்வளவு பிரியப் பட்டாள்?

"அரசர், கைகேயினால் வஞ்சிக்கப் பட்டிருக்கிறார். அவர் அவளை வெறுத்து உன்னைத் தேடி வரக் கூடும். நம்முடைய பண்பாட்டின்படி இத்தகைய சமயங்களில் பதிக்கு அருகிலிருந்து பணிவிடை செய்வதுதான் பதி விரதா ஸ்திரீகளின் முதற்கடமை. ஆகையால், அம்மா! நீ அயோத்தியிலேயே தந்தைக்குச் சேவை செய்துகொண்டிரு!" என்று சொல்லி விட்டான் ராமன்.

அறநெறி ஒருபுறம் இருக்க அரசியல் திருஷ்டிகொண்டு பார்த்தாலும் இது தான் மிகவும் உத்தமமான காரியமாகிறது. கௌசல்யா தேவி, மகனுக்கு அரசுரிமை அளிக்க வில்லை' என்று கோபம் கொண்டு, பதியைப் பரித்தியாகம் செய்துவிட்டு, பிள்ளையுடன் கூட போகாதது, மகாஜனங்களிடை அவளுக்கோர் நல்ல மதிப்பைத் தந்து விட்டது. கௌசலையின் இந்தச் செயல் கைகேயின் சுயநல வேட்டையை அனைவருக்கும் தெளிவாகத் தெரியும்படி செய்து விட்டது. தேசமக்கள் இருவருடைய குண தோஷங்களைச்சீர் தூக்கிப்பார்த்து கைகேயியின் பேராசையைத் தூற்றவும், கௌசல்யையின் உதார குணத்தைப் போற்றவும் தலைப்பட்டார் அல்லவா?

ராஜகுமாரி சீதை மரஉரிதரித்து, அண்ணனுடனும், தம்பியுடனும், வனத்திற்கு நடந்து சென்ற காட்சி, நிலைக் கண்ணாடி போல கைகேயின் கல் நெஞ்சைப் பிரதிபலிக்கச் செய்ய உதவியது. இவைகளினால் தான் ராமனுக்கு 'விரோதி' எனப்படுவேன் எவனும், அயோத்தி சிம்மாஸனத்தில் ஏறுவது சற்றும் சாத்யமற்றுப் போய் விட்டது.

ராமனுடைய அரசியல் ஞானம், உயர்ந்த ஒழுக்கம் இவைகளே மந்தரை, கைகேயி இவர்களின் சூழ்ச்சியின் விளைவாகக் கிடைத்த அரசுரிமை என்றைக்கும் பரதனுக்கே உரியதாகி விடாது செய்துவிட்டன என்றால் மிகையாகாது. "ராமனே அரசுரிமையைப் பெற தகுந்

தவன். அவன்கீழ் தாஸாநு தாஸனாக இருப்பதுதான் எனக்கு சுகத்தைக் கொடுக்கக் கூடியது." என்று பரதன் தெளிவாகச் சொல்லி விட்டப்போது, ராமன், விரோதிகளாகிய பரதனின் பாட்டன், மாமன், மந்தரை முதலியோர் தான் என்ன செய்ய முடியும்? ராமன் பரதன் மீது கொண்டிருந்த அபார பிரேமை, பரதனுடைய உள்ளத்தில், ராமன்மீது, அளவு கடந்த அன்பு குடிக்கொள்ள செய்து விட்டது.

சுகுமாரி, ஜனக மகா ராஜனனின் செல்வப் புதல்வி சீதை அந்தப்புரத்தில் வாழ்ந்துவந்த போது ஆகாயத்தில் பறக்கும் பறவைகூடக் கண்டதில்லையாம். அத்தகைய ராஜபுத்திரி கால்நடையாக ராஜபாட்டையில் போவதைக் கண்ட மகா ஜனங்களின் மனம் எவ்வளவுதான் கொதித்திருது? "குலத்தைக் கெடுக்க வந்த கைகேயி தன் கணவனைக் கொன்று மாற்றுள் மகனையும் காட்டிற்கு விரட்டி விட்டாள். அத்தகைய ராட்சஸி, பிரஜைகளாகிய நமது சுகதுக்கங்களை ஏன் கவனிக்கப் போகிறுள்? ஆகையால் நமக்கென்ன வேலை இனி இந்த ராஜ்யத்திலே? நாமும் ராமன்பின் போவோம் ராமனிருக்குமிடமே அயோத்தி," என்று புறப்பட்டுவிட்டனர் அந்த பட்டணத்து ஜனங்கள். கைகேயின் மூர்க்கத்தனமும், கொடிய ஸ்வபாவமும் ராமன் அறியாதது இல்லை. அறம், அரசர்க்கேற்ற ராஜதந்திரம், இரண்டையும் அனுசரித்து ஒழுகி வந்தானுகையால், "பதினன்கு வருஷம் வனவாசம் செய்யவேண்டும்" என்று கைகேயி சொன்னபோது, ராமன் சற்றும் மனம் கோணுது, சொந்தத் தாயினுடையது போல, அவள் சொல்லை மதித்து, உடனே காட்டிற்குப் புறப்பட்டான்.

எல்லோர் முன்பும் கைகேயினுடைய கொடிய செயலை ராமன் கண்டிக்காது விட்டான் என்றுலும், அவளுடைய செயலை அவன் வெறுத்தான் என்பது இராமாயணத்தில் பல இடத்தில் தெளிவாகிறது.

"நிந்திக்கக்கூடிய காரியங்களைச் செய்யும் இயல்புடையவள் இந்த கைகேயி. நம் அன்னையருக்கு விஷம் கூடக் கொடுத்துவிடலாம். ஆகையால் லட்சுமணு! நீ இங்கே இருந்து அயோத்திக்குத் திரும்பிப்போய் விடு. நான்மட்டும் சீதையுடன் தனியாகத் தண்டகை செல்லுகிறேன்" என்று சித்திரகூடத்தில் ராமன் லட்சுமணனைப் பார்த்துச் சொல்லுகிறுன்.

உலகத்திற்கே, அழகிய கீர்த்தி உண்டாகும் விதம், சற்றும் நீதி தவறுது, எந்த அரசியல் முறையை ராமன் கையாண்டு வந்தானே, எந்த முறையின் பயனுக இன்றளவும் மக்கள் பிரியத்துடன், 'ராமராஜ்யம்' என்று இன்றும் உதாரணம் காட்டும்படி அவன் அரசாட்சி அமைந்திருந்ததோ, அந்த உயர்ந்த அரசியல் முறையைப் பற்றி ராமனே பல இடத்தில் எடுத்து கூறுவதைக் காண்கிறேும் ராமாயணத்திலே.

அரசுரிமை கிடைப்பதற்குப் பதிலாக ராமனுக்கு வனவாசம் கிடைத்ததைக் கேட்டவளவில் லட்சுமணன், கோபமுற்று, படபடத்து,பல வசைமொழிகளை மொழிந்து தன் அபிப்பிராயத்தை வெளியிட்டபோது, ராமன் மிகவும் சாந்தத்துடன் ராஜநீதியின் உட்கருத்தை தெளிவுற விளக்கிச் சொன்னதாவது, "உலகத்திலே முன்னேற்றம் அடைவதற்கு ஏற்ற கருவிகள், அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுதான் இருக்கின்றன. பின் கூறப்பட்ட பொருள், இன்பம் ஆகியவைகள் அறம் ஒன்றிலேயே அடையத்தக்கவை.

எந்த அரசியல் முறையில் இந்த மூன்றும் சித்திக்கக் கூடுமோ அதுவே எனக்கு மிகவும் பிரியமானது. ஆனல், எந்த ஒரு முறையில், இந்த மூன்றும் சேர்ந்திராமல், ஏதேனும் ஒன்று மட்டுமோ, அல்லது இரண்டு மட்டுமோ, சேர்ந்திருக்குமாயின், அச்சமயங்களில் நான் நீதியின் சார்பில்தான் இருப்பேன்.

அதாவது கேவலம் பொருளோ இன்பமோ, அன்றி இரண்டுமோ சித்திக்கும் அறமற்ற ஒரு முறையை நான் கையாள

மாட்டேன். பொருளும் சித்தியாமல் அறம் ஒன்றே நிலை பெறுவதாயின், அந்த அரசியல் கொள்கையையே நான் மேற்கொள்வேன்." இதுதான் ராமனின் அரசியல் கொள்கை.

இராமனுடைய இந்த அரசியல் நெறி மிகவும் ஸ்லாகிக்கக் கூடியதே. பொருளாசை கொண்டவர்களை உலகம் வெறுக்கலாகும். போகவிலாசங்களிலே அதிகப் பற்றுள்ளவர்கள், அபக்கியாதிக்கு இலக்காகிறார்கள். ஆகையால், அழியக் கூடிய கேவலம் ஒரு ராஜ்யாதிகாரத்திற்காக உலக முற்றும் அழியாத கீர்த்திக் கொடியை நாட்டுவதற்கு ஏற்ற சாதனமாகிற அறத்தைத் துறக்க எந்த புத்திசாலி விரும்பக்கூடும் ?

ராமனுடைய பரிசுத்தமான இந்த அறநெறிதான் அவனை உலகத்தார் அனைவரும் பூஜிக்கும் ஓர் லக்ஷ்ய புருஷனாகச் செய்தது.

ராமனுடைய நீதிக்கு நேர்மாறான அரசியல் கொள்கைகளைக் கையாண்ட, மன்னன் தசரதன், மங்கை கைகேயி, இவர்கள் செயலை ஆராய்வோமானால், ராமன் கொள்கை, சரியானது என்று பின்னும் தெளிவாகிறதல்லவா ? மன்னனுடைய பெண்ணாசையினால் முடிவில் அவனுக்கு அபகீர்த்தியும் மரணமும் சம்பவித்தது. கைகேயினுடைய மண்ணாசை, பொன்னாசை இவை காரணமாக அவளுக்கு உண்டான அபக்கியாதிக்கும், தோல்விக்கும் அளவுண்டோ ?

'துவக்கத்தில் சொல்வதற் கரியத் துன்பங்களைக் கொடுப்பதாகினும், அறம் பிழறாத அரசியல் முறையே முடிவில் கோரிய பலனை அளிப்பதாகிறது' அதுவே, வெற்றிக்கும் புகழுக்கும் வித்தாக உள்ளது, என்பதை ராமன் வனவாசத்தினால் அறிகிறோம்.

மகாத்மா காந்தியின் அரசியல் கொள்கையை இன்று நாம் அந்த ராமனுடைய கொள்கையுடன் சீர் தூக்கிப் பார்த்தால், அஹிம்ஸை விஷயம் தவிர மற்றவைகளில் எவ்வளவு ஒற்றுமைப்பாடுகள் உள்ளன என்பது தெளிவாகத் தெரியும். ராமனுடைய வெற்றியைக் காலம் காட்டியதுபோல, இன்றைய கண்கண்ட தெய்வமாகிய மகாத்மா காந்தியின் வெற்றியையும் காலம் காட்டத்தான் போகிறது. நாம் பார்க்கக் கொடுத்து வைக்கா விட்டாலும், நம் சந்ததியார் அவசியம் காணப் போகிறார்கள். அன்றே 'ராமராஜ்யம்' பாரத பூமியில் மறுபடியும் நிலை பெற்றதாகும்.

கிராமத்தில் சுதந்திர தினம்

"ரஜனி"

ஆடி இருபத்து ஒன்பதி ரவினில்
பாரில்புதிய ஒளிகண் டேன்
ஓடி ஓடி வீட்டுக் காரியங்கள் வெகு
சீக்கிர மாகவே செய்யலானேன். 1

விட்டை மெழுகியே சுத்தம் செய்து எங்கும்.
வித விதமாகவே கோலமிட்டு
பாட்டுக் கேட்கப் போன பர்த்தா வருமுன்னே
தோரணங்கள் வேறு கட்டலானேன். 2

சந்தனம் தாம்பூலம் பாக்கு பழத்துடன்
வந்தார் கணவரும் வேகமுடன்
'இந்தா கதர்ச்சேலை ஏற்றதா பார்' என்றே
தந்தார் அவர் ஒரு பொட்டலத்தை. 3

கட்டை யவிழ்த்தேன், அகமகிழ்ந்தேன், அதைப்
பத்திரமாய் ஒரு பக்கம் வைத்தேன்
பெட்டியைச் சோதனை செய்து தகுந்ததோர்
சட்டையும் தேடிப் பிடித் தெடுத்தேன். 4

மங்கள ஸ்நானம் முடித்துக் கதராடை
மங்களமாகவே தானணிந்து
மங்கள தீபம் வரிசையாய் ஏற்றிப்பின்
எங்கள் மகாத்மா அடி தொழுதோம். 5

கையில் கதர்க்கொடி தாங்கியே நாங்களும்
மைதானக் கூட்டத்திற்கே விரைந்தோம்
பையப்பைய அந்தப் 'பன்னிரண்டைந்தும்'
பெருமிதத் தோடே நெருங்கிவர, 6

தேசிய கீதங்கள் பாடினர் ஓர் புறம்,
'ஜே ஜே' எனும் கோஷம் மற்றோர் புறம்.
பேசொணா இன்பத்தை யெய்தியே நாங்களும்
'அன்னைக்கு ஜே' என்று ஆர்ப்பரித்தோம். 7

தாயின் மணிக் கொடி துள்ளி யெழும்பியே
வானமளாவப் பறந்தது காண்
பேய்களின் கொட்டம் ஒழித்து விடுதலை
கண்டோம் : பெற்றோம் : என்பது போல் 8

வேட்டுக் கிளம்பிற்று ; ஓர்புறம் மேளமும்
வாத்திய கோஷம் முழங்கிடவே
கூட்டத் தலைவரும் மற்றவரும் தலை
தாழ்த்தி வணங்கினர் நம் கொடியை 9

தேசவிடுதலைப் போரினிலே உயிர்ச்
சேத மடைந்த பல்லாயிரவர்
தேசத்துக் காகவே தியாகங்கள் செய்தவர்
தேசத் தலைவர்கள் எல்லோருக்கும். 10

என்றென்றும் பாரத மக்கள் நாமெல்லோரும்
நன்றி செலுத்தல் முதற்கடன். நாம்
ஒன்றுபட்டே இனி வாழ்வம் உண்மை" என்று
பேசி முடித்தார் அவைத் தலைவர். 11

கூட்டம் கலைந்தது ; வீட்டை அடைந்தோம்,
'ஏன் மௌனச் சாதனை' என்றாரவர்
நாட்டமெல்லாம் அந்த நள்ளிரவில் எங்கோ
சென்று லயித்தது நானறியேன். 12

கன்னிக் கவிதை என் உள்ளத்தில் தோன்றிட
மெள்ள மெள்ள அதை விண்டுரைத்தேன்
'சின்னத் தனம்' என்றே சிரித்தா ரவர்' அதை
நானும் அறிவேன் 'என் றுரைத்தேன். 13

திருப்புகழ் மணியும் சுதந்திர நாடக மணியும்



14-9-47 அன்று மதுரை செல்லம் தியேட்டரில், மதுரை தேவி பால வினோத சங்கீத சபையாரால் நடிக்கப்பெற்ற குமாரவிஜயம், ஆரம்ப நாடகத்திற்குத் தலைமை வகித்து திருவனந்தபுரம் மாஜி சீப் ஜஸ்டிஸ் திருப்புகழ் மணி ஸ்ரீ. டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் பிரசங்கம் செய்கிறார். அருகில் மெடல்களுடன் நிற்பவர் தான் உரிமையாளர், நவாப் !

கானம் - பாவம் - காட்சி

த. ரா. ரா.

நடனம்

நடனக் கலைக்கு யோக காலம் இப்பொழுது. சங்கீதம் முதலிய பல கலைகள் அங்கம் பெற்றுள்ள இந்தக் கலை நம் தமிழ் நாட்டில் உன்னதஸ்தானம் பெற்றிருந்தது. இடைக் காலத்தில் பல காரணங்களால் இக்கலைக்கு மங்கும் காலம் ஏற்பட்டது. ஆயினும் சமீப சில வாண்டுகளாக இக்கலை தன் உரிய ஸ்தானத்தைப் பெற்று சிறந்துவிளங்குகிறது.

பெண்டிருக்குப் பிரத்யேக உரிமையான இக்கலையில் வல்லவர்களாய் ஆடவர்களும் விளங்குகிறார்கள் இக்காலத்தில். சமீபத்தில் ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் நடந்த ஸ்ரீ ராமமூர்த்தி என்பவரது நடன அரங்கேற்றுப்படிக்கு சென்றவர்கள் அன்னாரையும் அன்னாரைத் தயாரித்த ஸ்ரீ. தண்டாயுதபாணி அவர்களையும் பாராட்டினார்கள். ஸ்ரீ. தண்டாயுதபாணியவர்களது புகழ் பரவவாரம்பித்து விட்டது. மேற்கூறிய அரங்கேற்றுப் படியால் அவரது ஆற்றலை ரஸிக உலகம் நன்கறிய சந்தர்ப்ப மேற்பட்டது. இவரது மாணவர் ஓர் யுவர். நடனக் கலையில் இவருக்கு ஏற்பட்ட மோகம் காரணமாகவே ஓர் சிறந்த 'அமெச்சூர்' வித்வானைக் கலையுலகம் பெற்றது. கலைப்பயிற்சியில் அதிகச் சிரத்தைகாட்டிவருவது இவரது நடனத்தால் வெளிப்பட்டது. அன்றைய நிகழ்ச்சியில் இவரது வர்ணம் 'அயிட்டமும்' பதங்கள் 'அயிட்டங்களும்' குறிப்பிடவேண்டியவை. பதங்கள் விஷயத்தில் எடுத்துக்கொண்ட நேரம் சிறிதேயாயினும் 'பாவம்' நன்கு சோபித்தது. பிரகதி. ஸ்டுடியோ பின்னணி கீதம் கனநேர்த்தி! விளக்குஅமைப்புகள் செய்தவர்களுக்கு நம் பாராட்டுகள். அன்றைய நிகழ்ச்சியைப் பார்க்கக் கூடிய கூட்டம் எண்ணிக்கை, தரம் இரண்டிலும் உயர்ந்தது.

இந்நிகழ்ச்சியின் ஏற்பாடுகளில் சிரத்தையெடுத்துக்கொண்ட ஸ்ரீ. கே. எஸ். என். சுவாமி, டாக்டர் ராமமூர்த்தி இருவரும் பாராட்டுக்குரியவர்களே. செய்வதை திருந்தச் செய்தனர்.

வாத்தியக் கச்சேரி

கோட்வாத்ய வாசிப்பில் நம்மிடை இன்று ஒரு கே. எஸ். நாராயண அய்யங்காரும், ஒரு பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளும் சிறந்து விளங்குகிறார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் சமீபத்தில் ஸ்ரீ தியாகப்பிரம்ம சங்கீதவித்வத் சமாஜத்தின் ஆதரவில் செய்த கச்சேரி அற்புதம். அன்று கூடிய ரஸிகர்கள் சிரக்கம்பம் செய்த வண்ணமிருந்தனர். சாஸ்திரிகள் அன்று கொடுத்த கமகங்கள் காதினில் தேன் வந்து பாய்ந்ததுபோல வமைந்தன. உயர்ந்த கற்பனை வாசிப்பை அணிசெய்து விளங்கியது. அன்று சுபபந்து வராளியில் அவர் செய்த ஜாலங்கள் அபாரம். ராகமாலிகையில் அவர் பூரண வெற்றிபெற்றார். வாசித்தத் தோடி, சஹானா, தேவகாந்தாரி, சாயா முதலிய ராகங்கள் விஸ்தாரமாகவும் பூர்ணப் பொலிவுடனும் விளங்கின.

ஓர் உயர்தரக் கச்சேரியைக் கேட்டோம் என்ற பூர்ண திருப்தி உணர்ச்சி ஏற்பட்டது இக் கச்சேரியிலிருந்து திரும்புகையில்.

* * * *

மிஸ். மாலினி

உயர்ந்த நோக்கங்களை மனதில் வைத்து ஜெமினிக்காரர்கள் இப்படத்தைத் தயாரித்துள்ளனர். அதனால்தான் கதை பலம் அளவில் குறைந்தாலும் படம்சோபிப்பதற்குக் காரணம். வறுமை

யால் அல்லற்படும் ஏழைப்பெண், கதாநாயகி தன் தோழியின் உதவியால் உண்மை கலைச்சேவை, அதன்மூலம் சமூக சேவை புரியும் கலாமந்திரம் என்ற ஸ்தாபனத்தில் சேர்ந்து தானும் சுகம் பெறுகிறாள். ஸ்தாபனத்தையும் வளர்பெறச் செய்கிறாள். காலச்சக்கரம்சுழல்கிறது. வெத்து வேட்டு மனிதன் ஒருவன் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி பலன் பெறும் எண்ணத்துடன் தன் வலையில் பலரைச் சிக்க வைத்து சுகஜீவனம் செய்கிறான். கதாநாயகியும் இந்த 'பிட் கோட்டீஸ்' வலையில் சிக்குகிறாள். சேர்மனாக விரும்பும் பூர் செட்டியாரும் சிக்குகிறார். அவள் உள்ளத்தில் கள்ளம் புகுகிறது. 'பிட் கோட்டீஸ்' மேலும் தூபம் போடவே வெற்றிக்கு உதவிய ஏணியை உதைத்துத் தள்ளுகிறாள். 'பிட் கோட்டீஸ்'க்கு யோககாலம் பிறக்கிறது. டைரக்டரின் ஆற்றல், சேவைத் தத்துவ மேலீடு இவற்றின் காரணமாய்க் கலாமந்திரமும் கிராமங்களில் தொண்டின் மூலம் வெற்றிபெற்று வருகிறது. புதுக் கம்பெனி யாரம்பித்த சேர்மன்வாள், வெத்து வேட்டு, நடிகை மூவரும் 'நானே வருவதை யறிவாரோ?' வெத்து வேட்டு பணத்தையெல்லாம் வேட்டு விடுகிறான். கம்பெனி திவாலாகிறது. தன் நிலையை உணர்கிறாள் நடிகை. நன்றி கொன்றதற்கு மனவருத்தம் அடைகிறாள். கடைசியில் கலாமந்திரமே அவளை மீண்டும் ஏற்றுக்கொள்கிறது.

இதுதான் கதை. கதையில் சம்பவங்கள் அதிகமில்லை. ஆயினும் உயர்ந்த கட்டங்கள் பல உள. நாட்டின் தற்கால பரிதாபநிலையைச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திச் சித்தரித்துள்ளனர். கிராம வாழ்க்கையின் மேன்மை, பழையகால பண்பாடுகளின் உயர்வு அங்கங்கே வலியுறுத்தப்படுகிறது. மேலும், தற்கால அன்றாட வாழ்க்கையை உண்மையில் சித்தரித்துள்ளது குறிப்பிடவேண்டும்.

நடிகர்களில் கதாநாயகி மிஸ் மாலினியாக நடித்த ஸ்ரீமதி புஷ்பவல்லி திருப்திகரமாகவே நடித்திருக்கிறார். தோற்றம், நடிப்பு இவ்விரண்டு அம்சங்களிலும் நல்ல மார்க்குகள் அளிக்கலாம். இவரது சிநேகிதையாக நடிக்கும் சுந்தரிபாய் 'வெடுக் வெடுக்கென்று' பேசி ரஸிகர்களது பாராட்டைப் பெற்றுவிடுகிறார். வில்லனாக-வெத்துவேட்டு சம்பத்தாக நடிக்கும் கொத்தமங்கலம் சுப்பு நடிப்பு இயற்கையாகயிருக்கிறது. போகுமிடங்களிளெல்லாம் அளக்கும் அளப்பு அபாரம். அதிலும் ஜவுளிக்கடைச் செட்டியாரை சேர்மனாக்கும் முயற்சியில் போடும் வாய்ப்பந்தல், நடிக்கும் நாடகங்கள் இவைகளில் நல்ல வெற்றி. சேர்மனாக நடிக்கும் நாராயணராவ் நடிப்பும் கன இயற்கையா யிருந்தது. புது முகமான ஸ்ரீ சீதாராம் டைரக்டராக பாராட்டும் வகையில் இயற்கையாக நடித்திருக்கிறார்.

கலா மந்திரத்தின் கட்டுப்பாடுகளை யநுசரித்துவந்த மிஸ் மாலினி புடவைக்காரனுகவந்து தேநீர் விருந்திற்கு மிஸ்டர் சம்பத் அழைத்தவுடன், டைரக்டரும் செல்கிறார் என்று மிஸ்டர் சம்பத் கூறியதை நம்பி உடனே சென்றது கொஞ்சம் கதைப்போக்கில் யோசனை செய்ய வேண்டிய இடமா யிருக்கிற தென்றார் என் சகத் தொழிலாளி யொருவர். தண்ணீருக்கு ரேஷன் என்ற கட்டம் சற்று அதிகப்படியோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. மேலும் நான்கு பெண்கள் தாங்கள் விழையும் மணாளரை வர்ணித்துப் பாடும் கட்டம் சீர்திருத்தம் பெறலாம். கதையில் வரும் சம்பவங்கள் சிலவற்றில் கோவையைப் பெற கஷ்டப்பட்டுத்தானிருப்பார் டைரக்டர். வெற்றியும் காண்கின்றார்.

ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு காட்சியமைப்புகள் திருப்திகரமாகவே யிருக்கின்றன.

மொத்தத்தில் இப்படம் ஓர் புது முயற்சி. துணிந்து இறங்கியிருக்கிறார்கள் ஜெமினியார். விரஸங்களில்லாமல் அமைந்துள்ளது படம். பேஷாகப் பார்த்து ரஸிக்கலாம்.

சினிமாக் கதம்பம்

சினிமாக் கதம்பம் என்ற கார்ட்டூன் படம் ஜெமினியின் புது முயற்சி.